# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone : No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு மார்கழி மாதம் 3-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 47-ம் இலக்கம்

# சமாதானத்தின் மணியோசைகள்



**தாம் மரிப்பதற்குச் சிறிதுகாலத்தின்முன் 12-ம்பத்திநாத பாப்பானவர் சொன்னதாவது : "தினமும் மத்தியான வேளை திரிகாலச்செபத்தை உலகசமாதானத்துக்கும், அநேகபிரச்சினைகள் தன்னை எதிர்நோக்கிக் கொண்டிருக்கக்காணும் திருச்சபைக்கு உதவிசெய்வதற்குமான ஓர் செபமாகச் சொல்லும் வழக்கத்தைத் திரும்பவும் புத்துயிர்பெறச் செய்யுங்கள்" என்பதே.**

மத்தியானவேளை திரிகாலச் செபத்துக்காகக் கோவிலின் உயரியகோபுரத்திலிருந்து மணிகள்அடிக்கும்போது, அயர்லாந்தில், இத்தாலியில், ஸ்பெயினில், அல்லதுபிரான்ஸில் எப்போதாவதுநீங்கள் ஓர்சிறிய கிராமத்திலே இருக்கநேர்ந்தால் பெண்மணிகள் தங்கள்சிரங்களைத் தாழ்த்துவதையும், ஆடவர்கள் தங்கள்தொப்பிகளைக் கீழேஎடுப்பதையும், பிறகுஎல்லோரும் அம்மணியோசைக்குச் செவிசாய்த்துத் தங்கள்சுதேசபாஷைகளிலே பிதாவுடையவும், சுதனுடையவும், தூயஆவியுடையவும் நாமத்தினுலேஎன்று சிலுவையடையாளம்போட்டு, "ஆண்டவருடைய சம்மனசானவர் மரியாய்க்கு மங்களம்சொல்ல— அவள் தூயஆவியினுலே கர்ப்பவதியானுள்—பிரியதத்தத்தினுலே பூரணமரியாயே வாழ்க......" என்று சொல்வதையும் காண்பீர்கள்.

திரும்பவும்மணிகள் மும்முறை அடிக்கின்றன. அப்போது சகல கருமங்களும் ஒரேநிறுத்தத்துக்கு வருகின்றன. வேலைஎன்ற எண்ணமே இல்லாமற்போகிறது. இந்தச்செபத்தைச் செபிப்பதற்காக உலக அலுவல்களெல்லாம் கைவிடப்படுகின்றன. சகலரும் கீழ்நோக்கியவண்ணம் அம்மணியோசைகள் தேவனின்குரலொலி என்றுற்போல அவைகளுக்குச் செவிகொடுக்கிறுர்கள். அவர்கள் திரும்பவும் "இதோஆண்டவருடைய அடிமையானவள்—உம்முடையவார்த்தையின்படியே எனக்காகக்கடவது — பிரியதத்தத்தினுலே பூரணமரியாயே வாழ்க......" என்று சொல்லுகிறுர்கள். இவ்வாறெல்லாம் அவர்கள் திரிகாலச் செபஞ்சொல்லி முடிக்கிறுர்கள்.

பலநூற்றுண்டுகளுக்கு முற்பட்டசெபமும், அதிகபலனுள்ள வழக்கமும் எமதுநாட்டில் கூடிய மனேற்சாகத்துடன் இன்று ஏன் கையாளப்படுவதில்லை என்பது ஆச்சரியமாயிருக்கிறது. ஆயினும் அதிகம்விரைவிலே இது அனுட்டானத்துக்கு வருமென்று அநேகர் கருதுகின்றுர்கள். தாம் மரணிப்பதற்குச் சிறிதுகாலத்தின்முன் 12-ம்பத்திநாதபாப்பானவர் லூர்துதிருப்பதியில்கூடிய மரியாயின்மகாநாட்டுக்குச் சமுகமளித்திருந்த வேதசாஸ்திரபண்டிதர்களுக்குச் செய்தவேண்டுகோளிலே, "தினமும் மத்தியானவேளை திரிகாலச்செபத்தை உலகசமாதானத்துக்கும், அநேகபிரச்சினைகள் தன்னைஎதிர்நோக்கிக் கொண்டிருக்கக்காணும் திருச்சபைக்கு உதவிசெய்வதற்குமான ஓர்செபமாகச் சொல்லும்வழக்கத்தைத் திரும்பவும் புத்துயிரடையச் செய்யுங்க" ளென்று கேட்டுக்கொண்டார்.

திரிகாலச்செபம் கிறீஸ்துநாதரின் மனுஷாவதாரத்தை ஞாபகப்படுத்துகின்ற ஓர்செபமாகும். மூன்று சிறுபாவடிகளையும், மூன்று பிரியதத்தமந்திரங்களையும், ஓர்விசேஷசெபத்தையும் அடக்கிய இச்செபமானது, மரியம்மாள் கிறீஸ்துநாதரின் மாதாவாகத் தெரியப்பட்டிருக்கிறுளென்று கபிரியேல் அதிதூதரால் அவளுக்குச்சொல்லப்பட்ட மங்களவார்த்தையை நினைவூட்டுகின்றது. பொதுவிலே திரிகாலச் செபம் சொல்வதற்கான இரு முகாந்திரங்களை (1) சர்வேசுரனுக்கும், கிறீஸ்துநாதருக்கும், மரியாய்க்கும், திருச்சபைக்கும் மகிமையும், தோத்திரமும் உண்டுபண்ணுவதும், (2) மனிதருக்கு இரட்சணியமும், சமாதானமும் கொண்டுவருவதுமாகிய இரு

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## பிரான்ஸிய யாத்திரிகர்களைப் பாப்பரசர் பரிவாக வரவேற்கின்றுர்

பரீஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினுல்பெல்தின்ஆண்டவரது தலைமையிலே பிரான்ஸிய யாத்திரிகர்களின் பெரியகோஷ்டி ஒன்றை அருளப்பபாப்பரசர் சமீபத்தில்வரவேற்றுத் தாம் அத்துணை நெடுங்காலம் ஸ்தானீகராயிருந்த பிரான்ஸிய திருச்சபையின் பிரதிநிதிகளுக்குத் தம்மை விசேஷஅருளும், அருட்சியும்கொண்டவராகக் காண்பிக்கலாயினர். இந்தயாத்திரை 250 குருமாரை அடக்கியிருந்தது. இவர்களிலே 88பேர் பரீஸ்நகரில் பிரசுரமாகும் "லாகுறுவா" என்ற பிரபலகத்தோலிக்க தினவர்த்தமானியின் உதவியைக்கொண்டு இந்தயாத்திரையைச் செய்யக்கூடியோராயினர்

இந்தயாத்திரை வழமையிலே நடைபெற்றிராத மிகவிசேஷப்பட்டதொன்றுய் இருந்தது. பிரான்ஸிலுள்ள ஒவ்வோர்மேற்றிராசனத்திலுமிருந்து பிரதிநிதிகளாகக் குருமார்சென்றிருந்தார்கள். இவர்களில் எவரேனும் முன்னர்எப்போதாவது றோமாபுரிக்குச் சென்றவர்கள் அல்ல. இவர்களில் உதவி அவசியம் தேவைப்பட்டவர்களுக்கே "லாக்குறுவா"பத்திரிகை பொதுமக்களிடமிருந்து நிதிசேகரித்து உதவலாயிற்று. மேற்றிராசன குருமாரின்குழு ஓர்நாட்டுப்புறக் குருவானவரையும், சனப்புழக்கமான நகரம்ஒன்றின் குருவானவரையும் அடக்கியிருந்தது.

இந்தயாத்திரிகர்களை வரவேற்றபோது "பிரான்ஸியகுருமார் சமூகத்தைச்சேர்ந்த நமது அருயான அங்கத்தவர்களே, சாதாரணகத்தோலிக்க பிரதிநிதிகளே, உங்கள்தேசத்தின் பெரியகலாசார அப்போஸ்தலத்துவத்தினதும், சமயத்தினதும், சமூகசேவையினதும் உரிமைக்காரரே, பரிபாலனர்களே" என்று அழைக்கலாயினர். அதன்மேல் திருச்சபை தங்கிநிற்கின்ற அஸ்திபாரங்களான அர்ச். பேதுருவானவருக்கும், அர்ச். பாவிலுவானவருக்கும் குருமார், சாதாரண கத்தோலிக்கரின் விசுவாசபிரமாணிக்கத்தின்மூலம் பெறப்படவேண்டிய பாதுகாப்பைப்பற்றி அழுத்தமாக எடுத்துக்கூறினுர். 'நீங்கள் அர்ச். பேதுருவானவரிலும், அர்ச். பாவிலுவானவரிலும் தொடர்ந்து விசுவாசமாயிருங்கள்; திருச்சபையின் அப்போஸ்தலத்துவத்திலே தொடர்ந்து விசுவாசமாயிருங்கள்" என்று அவர் தமதுசொற்பொழிவை முடித்தார்.

## அகதிகளுக்கும், பசியால்வாடும் மக்களுக்குமாகத் தியாகஞ் செய்யுங்கள்

பின்தங்கிய நாடுகளிலுள்ள அகதிகளுக்கும், வறியவர்களுக்கும், பசிபட்டினிகிடக்கும் மக்களுக்குமாகத் தியாகங்கள்செய்யும்படியும், தியாகங்கள் செய்யப்படுதற்கான ஏற்பாடுகள்செய்யும்படியும் அகிலமுழுவதிலுமுள்ள கத்தோலிக்க ஸ்தாபனங்களைச் சேர்ந்த பெண்மணிகள் கேட்கப்பட்டிருக்கின்றுர்கள். உலகஅகதிகள்வருடத் தொண்டுக்கு உதவிபுரியுமாறு பரீஸ்நகரிலுள்ள கத்தோலிக்கபெண்மணிகளது ஸ்தாபனங்களின் உலகஐக்கிய சங்க கூட்டம்ஒன்று இவ்விதம் விண்ணப்பஞ்செய்திருக்கிறது. இதிலே அதுவெளியிட்டிருக்கும் உண்மைகள் சிலவருமாறு :

6 கோடி சிறப்பிள்ளைகள் முற்றுமே எலும்புக்கூடுகளாய் இருக்கின்றுர்கள். பம்பாயிலே இல்லிடமற்ற 2லட்சத்து50 ஆயிரம் மக்கள் தெருக்களிலே நித்திரை செய்கிறுர்கள். உலகின் குடிசனத்தொகையாகிய 275கோடிமக்களில் அரைவாசிக்குமேற்பட்டோருக்குச் சாப்பிடப்போதிய உணவு கிடைப்பதில்லை. உலகின் குடிசனங்களிலே பத்தில்ஒரு பங்குபேர் உலகின் முழுவருமானத்திலும் ஐந்தில்நாலுபங்கைப் பெறுகின்றுர்கள்.

இந்தக்கூட்டத்துக்கு ஐந்து கண்டங்களையும்சேர்ந்த 24நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தார்கள். ஒவ்வோர் நாட்டிலுமுள்ள கத்தோலிக்க பெண்மணிகள் ஒவ்வொருவரும் தனித்தனியே உதவிசெய்ய வேண்டுமென்றும், "ஓர்இல்லத்தையோ, ஓர்தொழில்துறையையோ, நண்பர்களையோ எதிர்பார்த்து—ஏனையமனிதர்களைப்போல் தாங்களும் சுதந்திரமாக வேண்டுமென எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அகதிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்வதிலே இருதயத்தையும், ஆத்துமத்தையும் அர்ப்பணஞ்செய்ய வேண்டு" மென்றும் கூட்டம்அவர்களைக் கேட்டிருக்கின்றது.

# குருவாகவந்த பூசைப்பரிசாரகன்

## தேவநற்கருணை வழங்கிய வீரச்சிறுவன்

இஃது ஓர் உண்மைச் சம்பவம். 1917-ம்ஆண்டின் இறுதிகண்ட அந்தச் சோககரமான காலத்தில்நிகழ்ந்தது. இது நடந்தேறிய இடம், வட இத்தாலியிலுள்ள ரைரேல்பிரதேசத்தின் மனோகரமிக்கத்தோன்றான அழகிற்சிறந்தசுகானா பள்ளத்தாக்கில் இருந்துவரும் நெவெல்எனும் சிறியகிராமமாகும்.

இத்தாலியைநோக்கித் தென்புறமாக ஆஸ்திரியபடைகளின் முன்னேற்றத்தைத் தடைசெய்துகொண்டிருந்தன அல்பைன்மலைப் பனிப்படலங்கள். கடைசியாக அந்த மாதமும் கழிந்தது. அதனால் ஆஸ்திரியபடைகள் காலந்தாழாது இத்தாலியின் வடபகுதியில் இறங்கின. தான் செல்லும் வழியிலே எதிர்ப்பட்டதையெல்லாம் சுக்குநூறாகநெரித்துத் துகளாக்கிக்கொண்டு மலையிலிருந்து உருண்டுவரும் பாரியதோர் பனிப்பாளம்போன்று அப்படைகள் எதற்குமே அஞ்சாத உன்மதமோடும், எதிர்க்கவாற்றாத உத்தண்டத்தோடும் எதிர்த்துத்தாக்கிக்கொண்டு, கல்லடிசிற்பன் போனவழியைப் போன்று அல்பைன் கணவாய்களினூடாக ரைரேல்பள்ளத்தாக்குகளுள்ளே இடிமுழக்கம்போல இரைந்துகொண்டு முன்னேறின. அவைகள் செல்லவேண்டிய பாதையில்தான் நொவெல் என்ற சிறியகிராமம்இருந்தது. ஒவ்வோர்மணித்தியாலமும் கழிந்துசெல்லச்செல்ல, அக்கிராமத்தின் அழிவுகாலமும் நெருங்கிக்கொண்டுவந்தது. தூரத்தில்கேட்கும் பீரங்கிகளின்முழக்கமானது, தங்களுக்குச் சொந்தமானபொருட்களுள் தாங்கள் தூக்கிச்செல்லக்கூடியவைகளைத் தங்களுடன்எடுத்துக்கொண்டு தற்பாதுகாப்புநிமித்தமாய்த் தென்புறமாக வலசைவாங்குதற்குத் தயாராயிருந்த மாபெரும் மக்கள்குழாமுடன் சேர்ந்துபோகக்கூடிய அக்கிராமவாசிகளுக்கெல்லாம் ஓர்முன்னெச்சரிக்கையாயிருந்தது.

ஆனால், அநேகர் போகமுடியாதிருந்தார்கள். வண. கிறெய்வ்சுவாமியாரும் இவர்களுடன் பின்தங்கிவிட்டார். என்றுமே அவருக்குப் பிரமாணிக்கமாயிருந்த அவருடையபூசைப்பரிசாரகன் லீனோவும் அவருடனே தங்கிவிட்டான். அப்போது அவனுக்குவயது எட்டுமாத்திரமே. இவர்களும் அதிகநேரம் காத்திருக்க வேண்டியிருக்கவில்லை. ஏனெனில், ஆஸ்திரியபடைகளின் முன்னணிக்காவல்வீரர் எதிர்பார்த்ததிலும் அதிகம்முன்னதாகவே அவர்களை அணமிவிட்டனர். அப்போதுநேரம் நடுச்சாமம்கடந்த சற்றுவேளைதான் சேர்ச்லைற்றுகள் பகலைப்போன்று அக்கிராமத்தைப் பிரகாசிக்கச்செய்தன. படைவீரர்களின் ஆரவாரஆர்ப்பரிப்பிலே குதிரைக் குளம்புகள் கலீரிடும் சப்தம் ஆழ்ந்துபோய்விட்டது. அச்சுறுத்தப்பட்டுப் பயப்பிராந்தியுற்ற நெவெல்கிராமவாசிகள் ஆற்றாது கோவிலில்போய் அடைக்கலம்புகுந்தார்கள்.

வண. கிறெய்வ்சுவாமியார் தேவநற்கருணையைக் காப்பாற்றுவதற்காகக் கோவிலைநோக்கிக் காற்றாய்ப் பறந்துசென்றார். லீனோவும் அவரைத்தொடர்ந்து காற்றிலும்கடிதாய்ச் சென்றான். ஆயினும்நேரம் அதிகம்பிந்திப் போய்விட்டது. போர்வீரர்பட்டாளம் ஒன்று கோவிலைநோக்கி வழிபிடித்து வேகமாக அவர்களைப் பின்தொடர்ந்து சென்றது. அணிவகுத்து அதனைநடத்திச்சென்ற படைத்தலைவன் கோவிலை அடைந்ததும் அங்கு இருந்தோரையெல்லாம் தங்கள்சிரசுக்குமேல் கரங்களைவைத்தபடி சுவர்நீளம் வரிசையாய்நிற்குமாறு ஆணையிட்டான். கிறெய்வ்சுவாமியார் தமதுகரங்களை மேலேஉயர்த்தியபடி பலிபீடத்தில் நின்றார். லீனோ அவர்பக்கத்தில் நின்றான். பட்டாளதலைவன் தான் சிறைப்படுத்திய துரதிர்ஷ்டமக்களையெல்லாம் ஒவ்வொருவராய்க்கூர்ந்து கவனித்தான். அவர்களில் எதிரியின் யுத்தசேவைக்கு உதவக்கூடியவராய்க் காணப்பட்ட ஒரேயொருவர் சுவாமியார்தான். அவரை உடனே கைதுசெய்யுமாறு ஆஞ்ஞாபித்தான் பட்டாளதலைவன்.

அப்போது தேவநற்கருணையைக் காப்பாற்றத் தமக்குநேரம்கொடுக்குமாறு கிறெய்வ்சுவாமியார் அவனை வேண்டினார். ஆனால், அவரதுவேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. தாமதிக்க நேரமில்லையென்று போர்வீரர் அவரிடம்கூறினார்கள். அவரைப்பிடித்துக் கட்டுக்காவலுடன் நடத்திச்செல்ல ஆயத்தப்பட்டார்கள். அப்போது லீனோ போர்வீரரின் கட்டுக்காவலையூடறுத்துச்சென்று சுவாமியாரின் கரத்தைப் பற்றிப்பிடித்து, "சுவாமி, நான் தங்களுக்கு ஏதும் உதவிசெய்ய முடியாதா?" என்று அழுதுகொண்டேகேட்டான். அவன் நடுங்கினான். ஆனால், அஞ்சவில்லை. சுவாமியார் ஒருகணப்பொழுது நற்கருணைப்பேழையை அங்கலாய்ப்புடன் உற்றுநோக்கினார். என்ன தியாகஞ்செய்தும் தேவநற்கருணை காப்பாற்றப்படவேண்டும் என்றார். அதைக்காப்பாற்ற அவருடைய பூசைப்பரிசாரகனைக் காட்டிலும் தாங்கள்அபாத்திரரென்றும், அவன் கோவிலிலேயே அதிகநேரத்தைச் செலவிட்டு ஓர்குருவாகுமாறு பத்திவேகத்துடன் மன்றாடிவருகிறானென்றும் அங்குநின்றோரெல்லாம் ஒருவாய்ப்படக்கூறினார்கள்.

இதைக்கேட்டதே "கற்றக்கோம்ஸ்" எனப்படும் சுரங்கஅறைகளும், தார்சிசியஸின் ஞாபகமும் காரிருளின் மின்னலைப்போன்று அவன்மனக்கண்ணில் ஓர்கால் பளீரிட்டுச்சென்றன. "லீனோ, நீதான் தேவநற்கருணையைக் காப்பாற்றவேண்டும்; ஆம், லீனோ நீதான் இந்த உதவியைச் செய்யவேண்டும்; விரைந்துபோ; ஓடிப்போ; நற்கருணைப் பேழையின் சாவியைப் பெற்று, நான் செய்ததை நீ கண்டதுபோல் திவ்வியநற்கருணையைப் பகிர்ந்துகொடு; எல்லாத் திருஅப்பங்களும் கொடுக்கப்பட்டதன்மேல் நற்கருணைப் பாத்திரத்தைத் திரும்ப நான் வருகிறவரை பத்திரமாக வைத்துக்கொள்" என்று ஆத்திரத்தோடும், கண்டிப்பாகவும்கூறினார். கிறெய்வ்சுவாமியார் அதன்மேல் போர்வீரர் அவர்கரங்களைக்கட்டி அவரைக் கோவிலுக்கு வெளியே வழிநடத்திப் போனார்கள். அவ்விதம் போனசுவாமியார் பிறகு திரும்பிவரவேயில்லை. ஏனெனில், அந்தோ! அவர் யுத்தத்தில் கொல்லப்படலாயினர்.

பாலியன்லீனோ சக்கிறிஸ்தைக்கு மின்னல்வேகத்தில் சென்றான். அங்கே பலிபீடத்தை எப்போதும் வஸ்திரங்கள் விரித்துச் சித்தஞ்செய்யும் பவோலா மெழுகுவர்த்திகளைக் கொழுத்தினாள். லீனோவுக்கு நற்கருணைப்பேழை எட்டத்தக்கதாய்க் கதிரையொன்றை எடுத்து வைத்தாள். பயப்பிராந்திகொண்ட விசுவாசிகளின் சிறியகூட்டம் பலிபீடத்தைச்சுற்றி முழந்தாட்படியிட்டது. ஒருபூசைப்பரிசாரகனைப் போன்று நீண்டசிவப்புவர்ண அங்கிதரித்து, அதன்மேல் 'சேர்ப்பிளிஸ்' போட்டு, தனதுமார்பிலே இருகரங்களையும் குவித்தவண்ணம் பயபக்தியுடன் லீனோ பலிபீடத்தைஅடைந்தான். அதன்முன்பாக ஆசாரத்துடன் முழந்தாளிட்டபின் சுணங்காது கதிரை மீதேறினான். நற்கருணைப்பேழைப் பூட்டிலே சாவியைஇட்டான். அதுவும்தாமதமின்றித் திறபட்டது. நற்கருணைப்பாத்திரத்தை வெளியிலெடுத்துப் பீடத்தின்மேல் வைத்து அதன்மூடியைத் திறந்தான். பின்னர் கரங்குவித்து இருமுழந்தாட்படியிட்டு எழுந்தான். ஒருகணப்பொழுது தடுமாறித் தாமதித்தான். பின்னர் சூழவரப்பார்த்தான். வீதியிலே இரைச்சல் கூடுதலாகிக்கொண்டிருந்தது. லொறிவண்டிகளும், நான்குசில்லுப்பாரவண்டிகளும் இரைந்துகொண்டுசென்றன. போர்வீரர்கள் ஆர்ப்பரித்துநின்றார்கள். கோவிற்சன்னல்களில் தீச்சுவாலை வெளிச்சம் காணப்பட்டது ஏனெனில், போர்வீரர் கிராமத்தை எரியூட்டிக்கொண்டிருந்தார்கள். அதனால் லீனோ தனது பணியைத் துரிதமாகச்செய்யும்படியாகப் பவோலா அவனைத்தூண்டினாள். அவனும் நற்கருணைப் பாத்திரத்தைக் கையிலெடுத்து அதனைத் தனதுநெஞ்சுடன்சேர்த்து உறுதியாக அணைத்துப்பிடித்துக்கொண்டு, நற்கருணையைக் கொடுக்கத்தொடங்கினான். தானும்உட்பட எல்லோருக்கும் எல்லாம் உட்கொள்ளப் படுகிறவரை அநேகம்முறைகொடுத்தான். திரும்பவும் கதிரையிலேறி நற்கருணைப் பேழையைப் பூட்டிவிட்டுச் சாவியைத் தனதுசட்டைச்சாக்கில்போட்டான். அப்போது மற்றோர் படைவீரர்கூட்டம் கோவிலுள் விரைந்துசென்றது. ஆனால்,அவர்கள் அங்கேகண்டதெல்லாம் பலிபீடத்தைச்சூழவர நெருக்கமாகக்குழுமியிருந்த கிழவர், கிழவிகளின் குழுவொன்றினையே. அத்துடன் தனதுமார்போடு இறுகத்தழுவிய ஓர் நற்கருணைப்பாத்திரத்துடன் சக்கிறிஸ்தைக் கதவினூடாக விரைந்துசென்ற ஓர்பாலிய பூசைப்பரிசாரகனையுமே. ஆ! தேவநற்கருணை காப்பாற்றப்பட்டுவிட்டது. சர்வேசுரனுக்குத் தோத்திரம்!

(தொடரும்)

---

## அர்ச். யுவக்கீனா ......

(இளைஞர்பக்கத் தொடர்ச்சி)

மகள் சிஸ்றன் சபைக் கன்னியாஸ்திரியானாள். குழந்தைகளாக இறந்துபோன இருவரையும்தவிர அவளுடைய மறு பெண்குழந்தைகள் எல்லாம் பிற்காலத்தில் கன்னிகா அந்தஸ்தையே மேற்கொண்டார்கள்.

யுவக்கீனா ஈஸ்ற்பான் என்ற குருவானவரின்ஆலோசனைப்படி அர்ச். பிரான்சீஸ்குவின்சபைக் கன்னியாஸ்திரியாக மாறினாள். 1820-ம் ஆண்டு இராணுவசட்டத்திற்குப் பணிந்து மறுவருடம் இப்பரிசுத்த விதவை நாடுகடத்தப்பட்டுச் சிறைத்தண்டனையும் அனுபவித்தாள். மீளவும் 1823-ம் ஆண்டு தாயகமான ஸ்பெயினுக்கு மீண்டாள். அதேவருடம் அவளுடைய ஆண்மக்கள் இருவர் விவாகம் செய்துகொண்டனர். (தொடரும்)

---

### யாத்திரைக் கன்னிகையின்

# ஆயித்தியமலை யாத்திரை

— தாண்டவன்வெளி, மட்டக்களப்பு

நமதுபங்கின் இல்லங்கள்தோறும் தரிசனைதந்து, நலனைஉவந்தளித்து, நவங்கள்புரிந்து, மரித்துப்போன விசுவாசிகளையுமே தரிசித்துள்ள பாத்திமா அன்னை எமதுபங்கைச்சேர்ந்த ஆயித்தியமலையையும் தரிசிக்குமாறு கால்நடையிலே அங்கு யாத்திரைசெய்யலாயினர்.

அன்பர்கள் அனைவோருக்கும் அருட்சியளித்த இச்சம்பவமானது விசுவாசம், நம்பிக்கை, தேவநேசம் என்னும் முப்புண்ணியங்களையும் விசுவாசிகளிடத்தும், ஏனையோரிடத்தும் பரிமளிக்கச் செய்வதாயிற்று. அன்று 6-11-59 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி. நமது கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகள் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் அளித்தனர். அதன்மேல் பாத்திமா அன்னையின் ஆசீரளித்து யாத்திரையை ஆரம்பித்து வைத்தார். கால்நடையிலே நடத்தத்துணிந்த 18 மைல் தூரமான இச்சுற்றுப்பிரகாரமானது வியாகுலத்தாயின் பத்திச்சபைப் பெண்மணிகள் நால்வர் திருச்சுரூபகேடயத்தைத் தாங்கிநடக்க, இடையறாத செபமாலை, செபம், கீதங்களுடன் வெட்டுக்காடு, ஊறணி, கொக்குவில், சத்துருகொண்டான் முதலாம்இடங்களின் வரவேற்புகளைப்பெற்றுத் தண்ணாமுனை, அர்ச். சூசையப்பர்ஆலயத்தை அடைந்தது. ஆங்கு தண்ணாமுனைப்பங்குக் கிறீஸ்தவர்கள் தங்கள் கட்டளைக்குரவர் வண. எவ். எம். செலர்சுவாமியாரின் தலைமையில் திருச்சுரூபத்தைவரவேற்று, ஆலயத்தில் வணக்கவழிபாடுநடாத்திச் சற்பிரசாத ஆசீர்வாதமளித்து, யாத்திரைகாரரை உபசரித்துவழியனுப்பிவைத்தனர். தொடர்ந்து யாத்திரை ஏறாவூர் சென்று வரவேற்பைப்பெற்றுச் செங்கலடியை அடைந்தது. அங்கும் வழிபாடு நடத்தியபின் கொடுவாமடுவூடே காடியனாற்றை அடைந்தது. அங்கே இந்துமதஆலயமணிகள் ஆர்ப்பரித்து மாதாவை வரவேற்றன. அங்குகூடிய இந்துமதத்தவர்களின் பக்திபற்றுதலான உபசரிப்பைஏற்று மீண்டும் தொடர்ந்து யாத்திரைநடைபெற்றது.

பிற்பகல் 3மணிமுதல் தொடர்பாகக் கால்நடையிலே இரவிரவாக நடைபெற்ற இந்தயாத்திரையிலே கலந்துகொண்டவர்கள் நாடுகாடு, மேடுபள்ளம், குளிர்பனி ஆகியவற்றைப்பாராது பள்ளச்சேனையை அடைந்து, பொழுது புலரும்சமயத்தில் ஆயித்தியமலைச் சதாசகாயநாயகி ஆலயத்தைச் சேர்ந்தார்கள். யாத்திரைக்கு வழிவிட்டதுபோல் மழையும்விட்டிருந்தது.

உன்னிச்சைத்திட்டக் குடியேற்றத்தில்வதியும் கத்தோலிக்கரும, பிறரும் மாதாவை நன்குவரவேற்றனர். ஆலயத்தில்சித்தம்செய்துசிங்காரித்திருந்த சிம்மாசனத்தில் திருச்சுரூபத்தை எழுந்தருளவைத்தனர். அதன்மேல் எமதுகுரவர் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுத்தனர். தொடர்ந்து அன்று 7-11-59 முதற்சனிவாரம் முழுநாளும் பரலோகஅன்னைக்கு வணக்கவழிபாடுகளை யாத்திரிகரும், குடியேற்றகாரரும, பங்குக்குரவரும் செய்துகொண்டிருந்தனர், பிற்பகல் 6மணியளவில் சற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் பாத்திமா அன்னையின் திருச்சுரூபம் சுற்றுப்பிரகாரமாக இப்பகுதி பி. டபிள்யு. ஓவசியர் திரு ஜே. அலோசியஸ்அவர்களின் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. மறுநாள் ஞாயிறன்று யாத்திரிகருக்கென நிறைவேறிய முதலாம் பூசையின்பின் சுற்றுப்பிரகாரமாக ஆலயம் வந்துசேர்ந்தது மாதாவின் திருச்சுரூபம். அங்கு கட்டளைக்குரவர் பாடற்பூசைநிறைவேற்றினர். பிறவிடங்களிலிருந்தும் அநேகர் இவ்வைபவத்தைக் கண்டுகளிக்க ஆலயத்தில் கூடியிருந்தனர். இத்திட்டத்தின்கீழ்வந்து குடியேறிய கத்தோலிக்கரின் இல்லவேலைகள் பூர்த்தியடையாத காரணத்தால் மாதா தமதுதரிசனையை இப்பிரதேசத்தில் தொடர்ந்துஅளிக்க முடியாமற்போயிற்று. பூசையின்பின் மாதாவுக்குப் பிரியாவிடைச்செபம் பக்திச்சிறப்பாகச் சொல்லப்பெற்றது. அன்று பகல் 11மணியளவில் யாத்திரைக்கன்னிகை கட்டளைக்குரவர் அவர்களின் மோட்டர்இரதத்தில்பவனிவந்து வயோதிபதாபன சிற்றாலயத்தில் தங்கியதும் ஆயித்தியமலையாத்திரை இனிதே பூர்த்தியாயிற்று.

# பாப்பரசரும் கருதினல்மார் திருச்சங்கமும்

அருளப்பபாப்பரசர் எட்டுப்புதிய கருதினல்மாரை ஆக்கிக்கருதினல்மார் திருச்சங்கத்திலுள்ள கருதினல்மாரின் முழுத்தொகையை முன்னெருபோதுமில்லாத மிகப்பெருந்தொகையாக— அதாவது 79பேராகக் கொண்டுவரவிருக்கின்ருர். அத்துடன் திருச்சபையின் அரசாங்கமாகிய கூறியாவிலுள்ள இத்தாலியர் அல்லாத கருதினல்மாரின் தொகையையும் உயர்த்தவிருக்கின்ருர்.

தாம் முதன்முதலாகக்கூட்டிய கருதினல்மார் திருச்சங்கத்திலே 23 புதியகருதினல்மாரை ஆக்கிச்சரியாய் ஒருவருடத்தின்பின் — அதாவது நிகழும்மார்கழிமாதம் 14-ந்திகதியன்று அருளப்பபாப்பரசர் கருதினல்மார் திருச்சங்கத்தின் அந்தரங்க கூட்டமொன்றைக்கூட்டி, அதிலே தாம்ஆக்கவிருக்கும் புதியகருதினல்மாரின் நாமங்களை அதிகாரபூர்வமாக அறிவிப்பார். இந்தககூட்டம் நிகழ்ந்து இரண்டொருதினங்களில் அவர்கூட்டும் கருதினல்மார் திருச்சங்கத்தின் பகிரங்ககூட்டத்திலே புதியகருதினல்மார் அவரிடமிருந்து தங்களுக்குரிய செந்நிறச்சிராக்களைப்பெற்றுக்கொள்வார்கள். கடந்த பன்னிருமாதங்களிலும் இரண்டாம்முறையாகச்சமூகமளிக்கக்கூடிய கருதினல்மாரெல்லாம் இந்தக்கூட்டங்களுக்கென ரோமாபுரிக்குப் பயணஞ்செய்வார்கள்.

புதிய கருதினல்மாரில்மூவர் பாப்பரசரின் ஸ்தானீகர்கள். நால்வர் ஏற்கனவே ரோமாபுரியில் பணியாற்றிவருகின்ருர்கள். ஒருவர் ஆயர்பணியில் ஈடுபட்டுள்ளவர். பிரித்தானிய இராச்சியம் தனது இரண்டாவதுகருதினலைப் பெறவிருக்கிறது. மூவர் இத்தாலியர். இருவர் அமெரிக்கர். ஒருவர் ஜேர்மனியர். ஒருவர்ஸ்பானியர்.

கிளாரேஷியன்சபையார் தங்கள் முதற்கருதினலாக வண. ஆர்க்காடியோ வருவோனுசுவாமியாரைப்பெறுகின்றனர். யேசுசபையார் 1948-ம்ஆண்டுக்குப்பின் தங்கள் முதற்கருதினலாக வண. அகஸ்ரினே பியாசுவாமியாரைப் பெறுகின்றனர். இவர் ஓர் ஜேர்மனியர். காலஞ்சென்ற12-ம் பத்திநாத பாப்பானவரின் ஆத்துமகுருவாய்இருந்தவர். புதியகருதினல்மாரின்நாமங்கள் வருமாறு:

✻ பிரான்ஸில் அப்போஸ்தலிக்க ஸ்தானீகராய் இருந்துவருகின்ற பவோலோ மறெல்லா அதிமேற்றிராணியார்.

✻ சுவிற்சர்லாந்தில் அப்போஸ்தலிக்க ஸ்தானீகராய் இருந்துவருகின்ற குஸ்ராவோ ரெஸ்ரா அதிமேற்றிராணியார்.

✻ ஜேர்மனியில் அப்போஸ்தலிக்க ஸ்தானீகராய் இருந்துவருகின்றலூவிஸ்யோசெவ்முவெஞ்ச் அதிமேற்றிராணியார்.

✻ சிக்காகோநகர் அதிமேற்றிராணியாரான கிறெகறி மியெர் ஆண்டவர்

✻ சங்கிபாச, கன்னிகா சபைகளின் திருச்சங்க செயலாளரான மகாவண. ஆர்க்காடியோ வருவோனு சுவாமியார்.

✻ அப்போஸ்தலிக்க கையொப்ப திருச்சங்க செயலாளரான பிரான்செஸ்கோ மொருனே அதிமேற்றிராணியார்.

✻ திருச்சபை நீதிமன்றத்தின் தலைவரான தியடோர் ஹேற் அதிமேற்றிராணியார்.

✻ யேசுசபைக் குரவரான மகாவண. அகஸ்ரினே பியாசுவாமியார்.

---

## பாப்பரசர் பிறந்தகிராமம் அவரைக் கௌரவிக்கிறது

வடஇத்தாலியிலே அருளப்பபாப்பரசர்பிறந்த சொத்தோஇல் மொந்தேஎன்றகிராமம் அவருடையநாமம் தரிக்கப்படவிருக்கின்ற "கின்டர்காட்ரின்" எனப்படும் பாலர்பாடசாலை ஒன்றுக்கு அஸ்திபாரக்கல்நாட்டி, அவர்திருமுடிசூடிய முதலாம் ஆண்டு நிறைவுவிழாவை ஞாபகப்படுத்தி அவரைக் கௌரவித்திருக்கிறது. இந்தக்கட்டடம் பாலர்கள் ஆராதனைவழிபாடு நடத்துதற்கான ஓர்கோவிலையும் அடக்கியதாயிருக்கும். முதன்மைபெற்ற ஓர் சீமெந்துக்கம்பெனியே இந்தப் பாடசாலையை ஓர்நன்கொடையாக அமைத்துக்கொடுக்க விருக்கின்றது. இத்தாலியிலே இது மிகப்பெரிதாயும், இக்கால அதிகம் நவீனமாதிரியாயும் இருந்துவரும்.

---

## நீகிரோவரான கத்தோலிக்க அரசர்

ஆபிரிக்க அரசர்களில் ஒருவர் சமீபத்திலே தமதுமேற்றிராணியாரிடம்சென்று அவருடைய ஆசீர்வாதத்தைக் கேட்டுப்பெற்றுக்கொண்டார். றுவான்டாநாட்டின் அரசரான லோமி முட்டாராருடாஹிக்வா மன்னர் சென்ற ஆடிமாதம் 25-ந்திகதி மரணமாயினர். அவருடையதந்தையின் இரண்டாந்தாரமனைவியின்புதல்வராகிய ம்வாமி கிகெரி அரசபதவிக்குவந்தார். இவர் இளைஞராய் இருக்கும்போது கத்தோலிக்க பாடசாலைகளில் பயின்றுவருகையில் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்து ஜோண் பப்ரிஸ்ற் ந்தாயின்துர்வா என்றநாமத்துடன் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். அரசபதவியேற்றமூன்ரும் நாள் இவர் காப்காயிபகுதியின் விக்கார் அப்போஸ்தலிக்குவான பெரூதேன் மேற்றிராணியாண்டவரிடம் சென்று அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்.

## அமெரிக்க தூதுவராலயத்தில் ஹங்கேரிய கருதினல் ஆண்டவர்

ஹங்கேரியின் தலைப்பட்டணமாகிய புடாபெஸ்ற்நகரிலுள்ள அமெரிக்க தூதுவராலயத்தில் தாம் அடைக்கலம்புகுந்த நான்காவதுஆண்டைக் கருதினல் மின்சென்ரி ஆண்டவர் சென்ற கார்த்திகைமாதத்தில் தொடக்கியிருக்கின்ருர். ஹங்கேரிய சுதந்திரஎழுச்சிக் கலகத்தின்போது சிறையிலிருந்துவிடுவிக்கப்பெற்ற இவர் 1956-ம்ஆண்டு கார்த்திகை மாதம் 4-ந்திகதியன்று அமெரிக்க தூதுவராலயத்திற்போய் அடைக்கலம்புகுந்தார்.

ஹங்கேரிய அரசாங்கம் ஓர் காலத்தில் அவரைத்தன்னிடம் ஒப்படைத்துவிடும்படி அத்தூதுவராலயத்திலுள்ள அமெரிக்க அதிகாரிகளைப் பலவந்தஞ்செய்ய முயல்வதற்குத் தயாராயிருக்கக் காணப்பட்டது. ஆனல், அவரைப்பற்றி இனிமேல்அரசாங்கம் கரிசனைகொள்ளப் போவதில்லையென்று அதிகம்சமீபகாலத்தில் அதிகாரிஒருவர் அறிவிக்கலாயினர். கருதினல் மின்ட்சென்ரி ஆண்டவர் தமதுநேரத்தில்அதிகமானபகுதியை எழுத்திலும்,வாசினையிலும் செலவிடுகின்ருர். தாம் எழுதத்தொடங்கிய தமதுசீவிய வரலாற்றுக் குறிப்புகளைத் தற்போதுஅவர் எழுதிமுடித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஆயினும் அமெரிக்க தூதுவராலயத்தைவிட்டு வெளிகொள்ளுமிடத்து அவரைக் கைதுசெய்வதற்குத்தயாராய் இரவும்பகலும் பொலிசர் அதன்வெளிவீதியைக் காவல்செய்தவண்ணம் இருக்கின்றனர். ஒவ்வோர் ஞாயிற்றுக்கிழமையும் கருதினல்ஆண்டவர் அத்தூதுவராலயத்தில் கடமைபார்த்து வருகிறவர்களில் ஒருசிலரான கத்தோலிக்கருக்கென்று திவ்வியபூசைநிறைவேற்றி ஆங்கிலத்திலே பிரசங்கம்ஒன்று செய்து வருகின்ருர்.

—✻—

## வத்திக்கானைத் தரிசிக்கும் அமெரிக்க ஜனதிபதி

அமெரிக்க ஜனதிபதி ஐஸனோவர்அவர்கள் நிகழும்மார்கழி மாதம் 6-ந்திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை வத்திக்கானுக்கு விஜயஞ்செய்யும்போது அருளப்பபாப்பரசர் அதிகம் இதயபூர்வமாகஅவரைவரவேற்க ஆயத்தமாயிருக்கிருர். இச்செய்தி வத்திக்கானிலே பெருமகிழ்ச்சியை அளித்திருப்பதாக அதிகாரிகள் கூறுகின்ருர்கள். கடந்த நாற்பது வருடகாலத்திலே, தாம் அதிகாரபதவி வகித்திருக்கும்போது அமெரிக்க ஜனதிபதிஒருவர் பாப்பரசரைச் சந்திக்கவிருப்பது இதுவே முதன்முறையாகும். கடைசியாக அவ்வாறுசந்தித்தவர் ஜனதிபதி வில்சன்அவர்களே. இவர் 1919-ம்ஆண்டு 15-ம் ஆசீர்வாதப்ப பாப்பானவரைச் சந்திக்கலாயினர். மூன்னள் அமெரிக்க ஜனதிபதியான திரு. ஹரி ட்றூமன்அவர்கள் 12-ம் பத்திநாதரைச் சந்தித்திருக்கின்ருர். ஆனல், அதிகாரபதவியிலிருந்து அவர் இளைப்பாறியபின்னரே இதுநிகழலாயிற்று. திரு. ஐஸனோவர் அவர்கள் வத்திக்கானுக்கு முன்பின் அறிமுகம் இல்லாதவரல்ல. சென்றமகாயுத்தத்திலே நேசநாடுகளின் படைகளுக்குத் தலைமைதாங்கியிருந்தபோது இவர் 12-ம்பத்திநாதபாப்பானவரைச் சந்தித்திருக்கிருர். ஜனதிபதிக்குப் பாப்பரசர் தமது ஆங்கிலபாஷைஅறிவைக் காண்பிக்கத்தானும் முயலக்கூடுமென்று வத்திக்கான் அதிகாரிகள் கூறுகின்ருர்கள்.

---

## 'ஐக்'கின் வத்திக்கான் விஜயம்

விரைவில் ஐரோப்பிய-ஆசிய சுற்றுப் பிரயாணமொன்றை மேற்கொள்ளவிருக்கும் அமெரிக்க ஜனதிபதி ஐசனோவர்அவர்கள் வத்திக்கானுக்கும் செல்வாரென "ஓசேர்வாத்தோறே ரோமானோ" என்னும் வத்திக்கான் பத்திரிகை தெரிவித்திருக்கிறது. அமெரிக்கஜனதிபதி சந்திப்பதை ஆவலுடன் எதிர்நோக்கும் பரிசுத்ததந்தை மார்கழிமாதம் 6-ந்திகதி அவருக்கோர் பிரத்தியேக பேட்டியருளுவார்.

---

## ஆங்கிலோ – கத்தோலிக்கதலைவர் கத்தோலிக்கராயினர்

இங்கிலாந்திலே ஆங்கிலோ-கத்தோலிக்கரென அறியப்படுகின்ற புரொட்டஸ்தாந்த வகுப்பினரின் தலைவர்களில் ஒருவர் திரு. கோர்டன் பாக்ஸ்அவர்கள். அங்கே இவர் பெர்ஷோர்எனுமிடத்தில் ஓர்வழக்கறிஞராகக் கடமைபார்த்துவந்தார். ஓர்அங்கிளிக்கன்சபைக் குருவாய்வரப் படிக்குமாறு சென்ற வைகாசி மாதம் இவர் தமது வழக்கறிஞர் பதவியைக் கைவிட்டிருந்தார். தற்போதுஇவர் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்திருக்கின்ருர். வோர்செஸ்றருககுச்சமீபமான குறூம்கோட் எனுமிடத்திலே இவரைத்திருச்சபையில் சேர்த்துக்கொள்ளும் வைபவத்தை அன்றுபுதன்கிழமை வண. டபிள்யு. ஈ வார்னர்சுவாமியார் நடத்திவைத்தார்.

---

● அன்றுபுதன்கிழமை அருளப்பபாப்பரசர் தமதுமகுடதாரண முதலாவதுவருட நிறைவுவிழாவைக் கொண்டாடித் தாம்பிறந்த மலைநாட்டிலிருந்து தம்மைச்சந்திக்கவந்த மக்களுக்குப் பேட்டியளித்துப்பேசுகையில், "நாமே நேர்முகமாக வந்து ரோமைநகரைச் சுற்றிவர உங்களுக்குக் காண்பிக்க ஆசிக்கிரோம்; ஆனல, துரதிர்ஷ்டவசமாய் நாம் ஓர்மறியற்காரராய் இருக்கிரோம்; நாம்செய்யவிரும்புவதை நாம் செய்யமுடியாதிருக்கிரோம்" எனக்கூறலாயினர்.

## மார்கழி மாதம்

பொதுக்கருத்து: வேதகலாபனைகளினால் வருந்தும் தங்கள்சகோதரர்களுக்காகத் தங்களுடையசெபம், வார்த்தை, கிரியைகளினால் உதவிபுரியத் தங்களுள்ளெழும் பெரும்ஆத்திரத்தை நெகிழவிடாதிருக்கும்படி வேண்டிக்கொள்வது.

வேதபோதக கருத்து: ஆசிய—ஆபிரிக்கமக்கள் திவ்வியயேசு பிறந்த விழாவின் உண்மையான அர்த்தத்தை உணர்ந்து அதன்வழியாக யேசுவைப்பற்றிய உண்மை அறிவை அடையும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத
# பாதுகாவலன்
1959-ம் ஆண்டு
மார்கழி மாதம் 3-ந் திகதி

## இருந்தும் ஆயிரம் இறந்தும் ஆயிரம்

ஆனை இருந்தும் ஆயிரம்பொன். இறந்தும் ஆயிரம்பொன். ஆனால், பிரதமர்பண்டாரநாயகா இருந்தும்ஆயிரம்.... இறந்தும்ஆயிரம் .... எமது செல்வநாட்டின் இன்றைய அலங்கோல நிலைமையை அவதானிக்கும் போது எவர்தான் மனங்கலங்காதிருப்பர்? இத்தப்பிரதாபகரமான நிலைக்குக் காரணர்யார் என்று கண்டறிவதற்குத் தூரந் தொலைக்குப் போகாமல், கடந்த மூன்றரைவருடங்களிலும் எமது நாட்டில் நிகழ்ந்துள்ளவைகளை நியாயபுத்தியுடன் ஆராய்ந்து பார்க்குமிடத்து எல்லாம் பகலைப் போன்று புலப்படுவதாகும். அம்மம்ம! எம். ஈ. பி. என்ற மக்கள்ஐக்கியமுன்னணி அரசாங்கம் என்றுஆட்சிப்பொறுப்பைஏற்றதோ, என்று பண்டாரநாயகா பிரதமராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றாரோ அன்றே அந்தநிமிஷமே நாட்டின்அரசியல்வாழ்க்கைக்கும், சமாதானத்துக்கும், ஐக்கியத்துக்கும், சுபீட்சத்துக்கும், சந்தோஷத்துக்கும் குழிதோண்டப்பட்டதெனலாம். பிரதமர்பண்டாரநாயகா ஆட்சிப்பீடத்தில் அமர்ந்ததும் தான் பொதுத்தேர்தலில் அடைந்த பெருவெற்றியாலே பெருமிதமுற்றவராய்த் 'தனிச்சிங்கள' சட்டத்தைத் தாண்டிக்காய்க்குள் சனியனைப்புகுத்தியவாறு அரங்கேற்றி மொழிப்பிரச்சினையைக் கிளப்பினர். அந்தப்பிரச்சினையோ சும்மாவிடவில்லை. எதிர்பாராதவிதமாகப் பிரச்சினையின்மேல் பிரச்சினையாக எத்தனையோ ஆயிரத்தைக் கிளப்பிவிட்டது. அதனால் அவர்இருந்தும் ஆயிரம்பிரச்சினை, இறந்தும் ஆயிரம்பிரச்சினை. இவைகள் அவர்இறந்தும் தீர்ந்தபாடில்லை.

பிரதமர்பண்டாரநாயகா ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருக்கும்போதே அவர் தலைமைதாங்கிய மக்கள்ஐக்கியமுன்னணி குலைந்தது. அதனைத்தொடர்ந்து அவருடைய பழையஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இன்று ஒருதலைவரேஇல்லாத கழுதைதேய்ந்து கட்டெறும்பான கதைபோன்று சுருங்கிச்சுருங்கி சிறுலங்காசுதந்திரக்கட்சியாகக் குலைந்துள்ளது. இந்தநிலையிலே எதிர்க்கட்சிகளெல்லாம் நடப்புக்காட்ட முனைந்திருப்பது ஆச்சரியமன்று. திரு. பண்டாரநாயகாவின் திடீர் மறைவானது நெய்க்குடம் உடைந்ததுபோலத் திருடபீஸ்யு. தஹநாயகாவுக்கு ஒருசுக்கிரதிசை பிறக்கச்செய்தது. அவர் திடீரெனப் பிரதமராய்வந்தார். ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தார். அவரும் பிரதமராகப் பதவியேற்றுச் சரியாய்இரண்டுமாதம் கழிந்துவிட்டது. அவரது ஆட்சியின் பயனாகவோ, அவர்முன்னோர்செய்த தவப்பயனாகவோ இலங்கை அரசியலில் இன்று சகலமும் ஒரேகுழப்பமாய் இருக்கிறது. அரசாங்ககட்சியில் பிளவு. மந்திரிசபையில் பிளவு. அரசாங்ககட்சி எம். பி. களே அரசாங்ககட்சியைப் பயமுறுத்தும்போது — மந்திரிசபையிலே மந்திரிமார்களிடையே தகராறிருக்கும்போது, என்றுமில்லாத நெருக்கடிக்குமேல் நெருக்கடியாய்—கலக்கடிக்குமேல் கலக்கடியாய் இருக்கும்போது பாவம், தஹநாயகாதான் என்செய்வார்? அவரே இருதலைக் கொள்ளியெறும்பாய் இடர்ப்படும்போது எவ்விதஇடரைத்தான் சமாளிப்பார்?

சனப்பிரதிநிதிகள் சபையில் அன்று கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றிலே அரசாங்கம் நியமன அங்கத்தவர்களின் தயவைப் பெற்று ஐந்தேஐந்து வாக்குகளால் உயிர்பிழைத்துக்கொண்டது. சென்றவாரம் கொண்டுவரப்பட்ட மற்றோர் நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும் நியமன அங்கத்தவர்களின் தயவைப்பெற்று ஒரேயொரு வாக்கால் மயிரிழையில் உயிர்தப்பியது ஆம், இன்று தஹநாயகாவின் அரசாங்கம் மக்கள்பிரதிநிதிகளின் அரசாங்கமென்று தன்னைப்பாராட்டிக் கொள்வதற்கான உரிமைகளையெல்லாம் இழந்துவிட்டது. மக்களின் பாராளுமன்றத்திலே மக்களால் தெரிவுசெய்யப்பெற்ற பிரதிநிதிகள்மத்தியிலே தனது பெரும்பான்மைப்பலத்தை இழந்துவிட்டது. "நான் பிரதமர்பதவிஏற்றபோது 1961-ம்ஆண்டின் பொதுத்தேர்தல்வரை பதவியைக் கொண்டுநடத்தலாமென்றுதான் நினைத்தேன்; ஆனால், இப்பொழுதோ பொதுத்தேர்தல் விரைவில் வரும்போலத் தனக்குத்தோற்றுகிறது" என்று பிரதமரே வாய்விட்டுக்கூறியிருக்கிறாரெனச் செய்திபிறந்துள்ளது. இருள்சூழ்ந்த இன்றைய அரசியற்சூழ்நிலையில் நாலாபுறமும் தாக்கப்பெற்று, பெரும்பான்மைபலம் நாளுக்குநாள் குறையப்பெற்று ஊசலாடுகின்ற தஹநாயகாஆட்சிப்பீடம் தடம்புரளுமுன் தானாகவே பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் பொதுத்தேர்தல்ஒன்றுக்கு வழிதிறக்குமானால் அது புத்திசாலித்தனமாகும். அன்றேல் நாடேபாழாகும். "சிறுபான்மையினருக்குச் செய்தஅநீதிகளே எம். ஈ. பி. அரசாங்கம் ஆட்டங்கொடுக்கக் காரணமென்றாலும் இந்தவேளை எழுவதொன்று குறிப்பிடத்தக்கது என்க.

### பதினோராம் பத்திநாத பாப்பரசர்
### மெய்விவாகத்தைப்பற்றி விடுத்த
# சாதாரண நிருபம்
## விவாகப்பொருத்தனை சர்வேசுரனால்ஸ்தாபிக்கப்பட்டது

(சென்றவாரத் தொடர்ச்சி)

பதின்மூன்றும் சிங்கராயரின் நிருபமானது மெய்விவாகப் பொருத்தனை சர்வேசுரனால் ஏற்படுத்தப்பட்டதையும், அது ஓர் தேவதிரவிய அனுமானம்எனும் மகத்துவநிலைக்கு உயர்த்தப்பட்டதையும், அது மரணபரியந்தம் நிலைப்பதையும் ஐயந்திரிபில்லாது தாபிப்பதை விஷயமாகக்கொண்டது. மெய்விவாகமானது மனுஷனால் ஏற்படுத்தப்பட்டதுமல்ல, மனுஷனால் புதுப்பிக்கப்பட்டதுமல்ல, தேவனால் ஏற்படுத்தப்பட்டு, அவராலேயே மீண்டும் அதன் ஆரம்பநிலைக்குக்கொண்டுவரப்பட்டதுஎன்பது ஒருபோதும்மாறாத, ஒருபோதும்அழிக்கவியலாத, அத்திவாரமான வேதபோதகம் என்பதை மீண்டும்வற்புறுத்துகின்றோம். மெய்விவாகப்பொருத்தனை பெலன்பெறவும், உறுதிபெறவும், உன்னதநிலை அடையவும் செய்வதற்கு நிரூபிக்கப்பட்ட பிரமாணங்கள் மனுஷனால்அல்ல, மானிடசுபாவத்தின் கர்த்தாவாகிய தேவனாலும், அச்சுபாவத்தை மீட்டுஇரட்சித்தவராகிய யேசுநாதசுவாமியினாலுமே ஏற்படுத்தப்பட்டவை. ஆகவே, இப்பிரமாணங்கள் மனுஷரால் ஏற்படுத்தப்பட்ட எவ்விதபிரமாணங்களுக்கும் கீழ்ப்பட்டவைகள் அல்ல. அம்மட்டா, கணவர்மனைவியர் என்னப்படுவோர் தம்முட்செய்துகொள்ளும் எதிர்ப்பொருத்தனைக்குத்தானும் விவாகப்பொருத்தனைப் பிரமாணங்கள் கீழ்ப்பட்டனவல்லவே. இதுவே பரிசுத்த வேதாகமங்களின்போதனை. இதுவே திருச்சபையின் இடையறாப் பாரம்பரியம். விவாகப்பொருத்தனையானது சருவேசுரனால் ஏற்படுத்தப்பட்டு, இருவருள் மாத்திரம்உள்ள ஒருபொருத்தனையாய், எப்போதும் நிலைப்பதாய், உறுதிப்பாடுடையதாய் இருப்பதென்பதே திரிதேந்து சாதாரண சங்கமும் அறிக்கையிட்டிருப்பதும், வேதாகம ஆதாரங்களினால் தாபித்திருப்பதுமாம். இனி விவாகப் பொருத்தனையானது சருவேசுரனால் ஸ்தாபிக்கப்பட்டதொன்றாயினும் அப்பொருத்தனையில் மானிடசுயாதீனமும் சம்பந்தப்பட்டு மகத்தான தொண்டு புரிவதாகும்.

விவாகங்கள் ஒவ்வொன்றும் புருட பூவையர் என்னும் இருவருக்கிடையில் ஏற்பட்டுள்ள பொருத்தமாதலால் இவ்விருவருடையவும் சுயாதீனமான சம்மதத்தில் நின்றும் பிறப்பதாகும். விவாகப்பொருத்தனை செய்துகொள்ளும் இருபகுதியாரும் மெய்விவாக அந்தஸ்தினால் வேண்டப்படும் உரிமைகளை ஒருவர்க்கொருவர் கையளிக்கவும், ஒருவர் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்செய்வது, சுயாதீனசித்தத்தில்நின்று உற்பத்தியாகும் இச்சம்மதமேயாம். இச்சம்மதம் விவாகப் பொருத்தனைக்கு அத்துணை இன்றியமையாத ஒரு விஷயமாதலால் அதனிடமாய் வேறு எவ்விதநிபந்தனைகளையும் உண்டுபண்ணிவிட எந்தமானிட அதிகாரத்துக்கும் உரிமையில்லை. ஆனல், இந்தச்சம்மதமானது குறித்தஇருவர் உள்ளபடி விவாகபொருத்தனையை ஏற்றுக்கொள்ள விரும்புகின்றனரோ என்பதை அல்லது குறித்த ஒரு மாப்பிள்ளை குறித்தபெண்பிள்ளையை விவாகம்செய்ய விரும்புகின்றனரோ என்பதை மாத்திரம் காட்டுவதாகும். ஆனால், ஒரு விவாகப்பொருத்தனையில் இயல்பாய் அடங்கியுள்ள எத்தனையோ விஷயங்கள் இச்சுயாதீன சம்மதத்திற்கு முற்றும் வேறானவைகளாம். ஏனெனில், ஒருவர்உள்ளபடி விவாகப்பொருத்தனைசெய்துகொண்டபின்பு, இப்பொருத்தனை சம்பந்தமாய்ச் சருவேசுரனால் ஏற்படுத்தப்பட்ட சகலபிரமாணங்களுக்கும், அதன் சகல நிபந்தனைகளுக்கும் முற்றும்கீழ்ப்பட்டவரேயாகின்றார்.

இந்தநியாயம் காரணமாகவே விவாகப்பொருத்தனையில் விசுவாசகாதகமில்லாது நடந்துகொள்வதைப்பற்றியும் அப்பொருத்தனையின்பயனாகச் சந்தானவிருத்தியைப்பற்றியும் பேசியவிடத்து அர்ச். தோமாஸ் அக்குயினாஸ் என்னும் வேதபண்டிதர், "இவ்விருகாரியங்களும் விவாகப் பொருத்தனைக்கு அத்துணை இன்றியமையாதவைகளாதலால் இவற்றை நீக்கிவிடும் எவ்வித நிபந்தனைகளாவது விவாகப் பொருத்தனையில் சேர்க்கப்படின் அவ்விதபொருத்தனை ஒருபோதும் உண்மையான விவாகப் பொருத்தனையாதல்கூடாது" என்று கூறியிருக்கிறார்.

விவாகப்பொருத்தனைக்கு உட்பட்டவர்களுடைய சரீரங்களிலும்பார்க்க அவர்களுடைய ஆத்துமாக்களே அதிகம்நெருங்கியபந்தனங்களாற் பொருத்தி இணைக்கப் படுவனவாகும். இவ்விதஇணைப்பும் அந்நேரத்துக்கந்நேரம் தோன்றிமறையும் ஐம்புலவேட்கையினால் அல்லது மனப்பற்றுதலினால் நிகழ்வதல்ல. ஆனால், பூரணஅறிவு அவதானத்துடன் செய்யப்பட்ட சுயாதீன சித்தத்தின் உறுதியானமுயற்சியால் நிகழ்வதாகும். இவ்வித இணைப்பினால் விவாகப்பொருத்தனை செய்துகொள்ளும் இருஆத்துமாக்களுக்கிடையில் அழியாத பரிசுத்தமான பந்தனம் ஒன்று ஏற்படுவதாகும் ஆகவே, விவாகப்பொருத்தனையானது மற்றெவ்வித பொருத்தனைகளிலும் விளங்காத விசேஷஇலட்சணம் பெற்று விளங்குவது. புத்தியோசனையோ சுயாதீனசித்தத்தின் செயலோ எவ்விதமும்சேராது இயற்கை வேட்கைகளினால் மாத்திரம் தூண்டப்பெற்ற விலங்கினங்களின் சேர்க்கைகளிலும் விவாகப்பொருத்தனையானது முற்றும் வித்தியாசமானது. அன்றியும் உண்மையானதும், யோக்கியமானதுமான இருமானிடமனசுகளின் ஒற்றுமையுடன் முற்றும் பொருத்தமற்றதும், வாய்த்தால் வாய்க்கட்டும், போனால்போகட்

## தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

1960-ம்ஆண்டிலே சகல கத்தோலிக்க பாடசாலைகளிலும் அனுசரிக்கப்படவேண்டிய பாடசாலைத்தவணைகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

1-ந் தவணை: 18-1-60 — 8-4-60.
2-ந் தவணை: 2-5-60 — 10-8-60.
3-ந் தவணை: 5-9-60 — 16-12-50.

மாசி 4, பங்குனி 29, வைகாசி 10, 11, ஆனி 8, ஐப்பசி 19 இவை அரசாங்க விடுமுறை நாட்கள். ஆகையால், அத்தினங்களில் பாடசாலை நடைபெறக்கூடாது.

பங்குனி 2 — விபூதித்திருநாள்.
வைகாசி 22 — நம்மேற்றிராணி ஆண்டவர் தினம்.
வைகாசி 26 — திவ்வியகர்த்தரின் ஆரோகணத் திருநாள்.
ஆனி 29 – ஆடி 4 — மருதமடுத் திருநாள்.
கார்த். 4 — பரிசுத்த பாப்பரசர் தினம்.
மார்கழி 8 — தேவதாயாரின் அமலோற்பவத்திருநாள்.

இவை எல்லாப் பாடசாலைகளுக்கும் விசேஷ விடுமுறை நாட்களாகும்.

1960-ம் ஆண்டில் தத்தம் பாடசாலைகளில் அனுசரிக்கப்படவிருக்கும் அத்தியாவசியமான விசேஷ விடுதலைநாட்கள் இருப்பின் அவற்றைக் குறித்துக் காலதாமதமில்லாது, கட்டளைச்சுவாமியாரின் கையொப்பத்துடன் அனுப்பிவைக்கும்படி தலைமைஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1960-ம் ஆண்டுக்குரிய பாடசாலை நேரசூசிகள் 25-1-60-க்குப் பிந்தாமல் கட்டளைச்சுவாமியாருடாக நமக்கு அனுப்பப்படவேண்டும்.

Philip Ponniah,
Gen. Manager, R. C. Schools

Jaffna, 1-12-59

## வாடிய பூ

— அமுது —

அன்றொருநாள் காந்திமதி என்றசிறு குழந்தை
அகரவரி மடத்தினிலே கற்றுவரும் போது
தென்றலிலே ஆடுகின்ற பூக்கன்றைப் பிடுங்கிச்
செந்தமிழை ஊட்டுகின்ற மலர்அக்கா கொடுத்து

●

"வீட்டருகில் இதைநட்டுத் தண்ணீரும் ஊற்றி
மிகநன்றாய் எருவிட்டுச் சிலநாட்கள் கவனி
ஆட்டோடு பசுக்கன்று கடியாது கவனி
அழகான பூப்பூக்கும் அறிவாய்" என் றுரைத்தாள்

●

காந்திமதிச் சிறுகுழந்தை பூக்கன்றை நட்டுக்
கண்போல அதைக்காத்துத் தண்ணீரும் வார்த்து
வேந்தர்களின் பணிபோலப் பார்த்துவரும் நாளில்
விழிபோல மலரொன்று விரிந்திருக்கக் கண்டாள்

●

"எங்கப்பா இருந்துவந்தாய்?" என்றதனைக் கேட்டாள்
இருகையால் அணைத்ததனை முத்தமொன்று கொடுத்தாள்
அங்கிருந்த அம்மாவைக் கைதட்டி அழைத்தாள்
ஆனந்தக் கடல்பெருகி அலையடிக்க நின்றாள்

●

கைதட்டி வாய்விட்டுக் கலகலெனச் சிரித்தாள்
கார்முகிலைக் கண்டவொரு மயில்போலக் குதித்தாள்
பொய்யில்லைப் புழுகில்லை வந்துபார் என்றாள்
போனவர்கள் வந்தவர்கள் யாவரையும் அழைத்தாள்

●

மலரக்கா அறியஇந்த வரலாற்றைச் சொன்னாள்
மழலைமொழிப் பாலகியின் வஞ்சமிலா உள்ளம்
பலருக்கும் ஆனந்தப் பரவசத்தை யூட்டப்
பள்ளிவிட்டுப் பின்னேரம் பசுங்குழந்தை வந்தாள்

●

"யாரிட்ட குற்றமிது?" அம்மாவென் றலறி
அழகான பூவாடிப் போயிருக்கக் கண்டாள்
வீரிட்டு நிலத்தினிலே விழுந்தடித்துப் புரண்டாள்
விழியாலே வழிநீரை மெல்லெனவே துடைத்து

●

"கண்மணியே! கதறாதே இப்படித்தான் பூக்கள்
காலையிலே மலர்ந்திருந்து மாலையிலே வாடும்
மண்ணினிலே தோன்றியன மறைந்திடவே வேண்டும்
வல்லபரன் திருவுள்ளம் வருந்தாதே" என்றாள்

●

"உன்முகம்போல் அழகான பூக்களின்இவ் வாழ்க்கை
ஒருபொழுதே இப்புவியில் உண்டென்று கண்டாய்
என்மகளே! நம்முடலும் இப்படித்தான் ஒருநாள்
இவ்வுலகை நீத்துவிடும் இதையென்றும் மறவாய்."

●

"மரணத்தின் பின்னர்தான் வாழ்வெமக்குக் கண்ணே!
மனிதஉடல் வான்குருவி வாழ்கின்ற கூடு
பரமனெமக் காயத்தம் செய்திருக்கும் இடத்தில்
பனிமலரோ போகாது நாங்களங்கு செல்வோம்."

## சமாதானத்தின் மணியோசைகள்!

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

முகாந்திரங்களைத் திருச்சபை எடுத்துக்கூறுகின்றது.

திரிகாலச்செபங்களிலே உத்தானத்தின்மகிமைக்கு எம்மைவழி நடத்தும் வரப்பிரசாதங்களை இரந்துவேண்டுகிறோம். பிரியதத்தமந்திரங்களிலே எமது மரண நேரத்தில் மரியாயின்ஒத்தாசை மூலமாகக் கடைசிபரியந்தம்நிலைத்திருக்கும்வரத்தை இரந்துகொள்ளுகிறோம். ஈற்றில் நாம் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதம், நல்மனதுள்ள சகலமனிதரும் ஆசிப்பதான ஆத்துமசமாதானமே.

திரிகாலச்செபத்தின் ஆரம்பகாலத்திலே மாலைவேலை மணி அடிக்கப்படும்போது, சமாதானத்திற்காகவே இந்தச்செபம் சொல்லப்பட்டுவந்தது. அதனால் சமாதானத்தின் மணியென்று இந்தமணி அழைக்கப்பட்டுவந்தது. 1472-ம்ஆண்டிலே 9-ம் லூயிஸ்அரசர் சமாதானத்துக்காக மத்தியானவேளை இந்தப் பிரியதத்தமந்திரங்கள் சொல்லப்படவேண்டுமென்று உத்தரவிட்டார். தற்போது சொல்லப்பட்டுவரும் திரிகாலச்செபம் உருவானது 18-ம்நூற்றாண்டின் ஆரம்பத்திலாகும். இதுசொல்லப்படும் ஒவ்வோர்முறைக்கும் 100 நாள்பலனையும், திரிகாலச்செபமணி அடிக்கும்போது முழந்தாளிலிருந்து தினமுந் மூன்றுமுறை இதுசொல்லப்படும்போது வழமையானநிபந்தனைகளுடன் மாதம்ஒருமுறை ஒருபரிபூரணபலனையும் 13-ம்ஆசீர்வாதப்பபாப்பானவர் வழங்கினார்.

ஆதலால் எவ்வளவோ ஆத்மீக, லௌகீக நன்மைகளுக்கேதுவான திரிகாலச்செபத்தை நாம் தினமும்மூன்றுவேளையும் கருத்தாகச் சொல்லிவருவோமாக!

நாம்இதனைத் தனிமையாக எமது காரியாலயத்திலும், தொழிற்சாலையிலும், வீதியிலே நடந்து செல்லும்போதும் சொல்லமுடியும். தினமும் அவ்வாறுசொல்லுவதால்நமதுஆத்துமங்களுக்குப்போல, உலகத்துக்கும் சமாதானத்தைக் கொண்டுவருகிறவர்களாவோம். சகலத்தையும் கிறீஸ்துநாதரிடமாகக் கொண்டுவருவதான திருச்சபையின் தூதிலே அதற்குத் துணைச் செய்கிறவர்களாவோம்.

தமிழாக்கம்: ஜே. என். ஜே.

---

டும்எனும் மனப்பான்மையுடன் ஸ்திரி பூமான்களுக்கிடையில் உண்டாகும் ஒன்றிப்புக்களும் மெய்விவாகப் பொருத்தனைகள் அல்லவாம். இப்படிப்பட்ட பொருத்தனைகளுக்குக் குடும்ப சீவியஉரிமைகள் இல்லவேயில்லையாம்.

### முதல் வெள்ளி முதற் சனி

—*—

நாளை (4-12-59) வெள்ளிக்கிழமை முதல்வெள்ளி—மறுநாள் முதற்சனி

தொடர்பாக ஒன்பதுமாதங்களிலே முதல்வெள்ளிக்கிழமைதோறும் திவ்வியநன்மை வாங்குகிறவர்களுக்குப் பாக்கியமான மரணமடையும்வரப்பிரசாதத்தை அருள்வதாக நமது திவ்வியகர்த்தர் வாக்களித்திருக்கிறார்.

தொடர்பாக ஐந்துமாதங்களிலே முதற்சனிக்கிழமைதோறும் திவ்வியநன்மைவாங்கித்தேவஇரகசியங்களைத்தியானித்துக்கொண்டு 15 நிமிஷநேரம் செபமாலை செபிக்கிறவர்களுக்கும் அதேவாக்குத்தத்தத்தைப் பரிசுத்த தேவதாயார் அளித்திருக்கின்றார்.

### உதவிப்போலிஸ் இன்ஸ்பெக்றர் ஜெனறல்

உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்றர் ஜெனறலான திரு. சிட்னி டி சொய்சாவைச் சென்றவெள்ளிக்கிழமைகாலை 10மணிமுதல் உத்தியோகத்திலிருந்து விலக்கப்படவேண்டுமென்று முதல்நாள் இரவு பாராளுமன்ற அரசாங்கக்கட்சிக்குழு தீர்மானித்தது. இளைப்பாறுமுன் வெள்ளிக்கிழமைமுதல் லீவுபெற்றுச் செல்லும்படி அரசாங்கசேவைக் கம்மிஷன் அவருக்குக் கட்டளையிட்டுள்ளது. அதனால் அன்றுமுதல் அவர் லீவில்நிற்கின்றார். ஆயினும் இம்மாதம் 5-ந்திகதி பரீஸ்நகரில்கூடும் சர்வதேச பொலிஸ்மகாநாட்டில் அவர் கலந்துகொள்வார்.

### மலையாளப்புகையிலை

இலங்கை—இந்திய புகையிலைஒப்பந்தப்படி 1960-ம்ஆண்டில் 770 கண்டி புகையிலைமட்டுமே மலையாளத்துக்கு ஏற்றுமதிசெய்யலாமென்று யாழ்ப்பாணம்—மலையாளப் புகையிலைச்சங்க அங்கத்தவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது இந்த 770 கண்டிபுகையிலையும் ஆளுக்கு ஒருகண்டிக்குமேற்படாது முதல்கொடுக்கும் அங்கத்தவர்களிடமிருந்தே ஏற்றுக்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### மோட்டர்அம்புலன்ஸ்படகு

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த பலதீவுகளிலும் வசிக்கின்றமக்கள் கடுமையான நோய்காணும்போதெல்லாம் அவர்களை வெளியிடங்களுக்கு எடுத்துச்செல்ல முடியாதிருந்துவந்த நிலைமையானது தீவுப்பகுதி எம். பி. திரு. வி. ஏ. கந்தையா அவர்களின் பெருமுயற்சியால் இப்போது நீங்கியுள்ளது. அதாவதுபலதீவுகளுக்குமிடையே சேவைக்குஉதவுவதற்காக ஊர்காவற்றுறைக்கு உதவப்பட்ட மோட்டர்அம்புலன்ஸ்படகு சென்ற வெள்ளிக்கிழமை அங்குகொண்டுவரப்பட்டிருக்கிறது. அன்றுமாலை அதனைத் தீவுப்பகுதிச் சுகாதாரமேற்பார்வை அதிகாரி பொறுப்பேற்கலாயினர்.

### குருத்துவ வெள்ளியூபிலி

இலங்கையிலே அமலோற்பவ மரியநாயகிசபைக் குருமாரின் முன்னாள் சிரேஷ்டரான மகாவண. ஜெறுட் போர்த்தின் சுவாமியவர்கள் சென்ற 25-ந்திகதிபுதன்கிழமை தமது குருத்துவ 25-ம்வருட வெள்ளியூபிலிவிழாவைக் கண்டுகளிக்கலாயினர். சுவாமியவர்கள் தற்போது அமலோற்பவமரியநாயகி சபைக்குருமாரின் ஒழுங்குகளைத்திருத்தியமைக்கும் ஆலோசனைச்சபையின் தலைவராய் இருந்துவருகின்றார்.

### யாழ்நகர தண்ணீர்த்திட்டம்

யாழ்ப்பாணநகருக்குக் குழாய்மூலம் தண்ணீர்வழங்கும் திட்டவேலை விரைவில்ஆரம்பமாகுமெனத் தெரியவருகிறது. இதற்கான கொந்திறாத்திலே வாக்கர்அண்ட்சன்ஸ் கம்பெனி கைச்சாத்திட்டிருக்கிறதென்றும், உடனடியாக வேலையைத்தொடக்க அது முன்வந்திருக்கிறதென்றும் யாழ்ப்பாண மேயர் தெரிவித்துள்ளனர். இத்திட்டத்தின் முதற்பகுதி பூர்த்தியானதும் நகரின் கிழக்குப்புறமாகக் கொழும்புத்துறையிலிருந்து மேற்குப்புறமாக நாவாந்துறைவரையிலுள்ள பத்துவட்டாரங்களுக்குக் குழாய்மூலம்தண்ணீர் வழங்கப்படும்.



# இளைஞர் பக்கம்

**அன்புமிக்க இளைஞர்களே!**

உண்மையை மூன்று வழிகளால் அறிந்துகொள்ளலாம். முதலாவது, யாதோர் அத்தாட்சியும் தேவைப்படாதவண்ணம் நேர்நேராய்க் காண்பதினால். உதாரணம்: என் கையிலிருக்கும் பேனையை நேர்நேராய் நான் அறிந்து கொள்ளலாம்.

இரண்டாவது, தெரிந்த ஓர் உண்மையிலிருந்து வேறோர் உண்மையை அனுமானித்து அறிந்துகொள்ளுதலால். உதாரணம்: மழை பெய்தது என்றதிலிருந்து நிலம் அதின்நிமித்தம் ஈரமாகியிருக்கும் என்ற உண்மை வெளிவருகின்றது.

மூன்றாவதாக, ஒருவர் சொல்லுவதை நம்பி ஏற்றுக்கொள்ளுவதால். உதாரணம்: சந்திர கிரகணம் இன்ன நாளில் வருமென்று வானசாஸ்திரி சொல்லும்போது நாம்அதை உண்மையென்று ஏற்றுக்கொள்ளுகிறோம். இம் மூன்றும் வகையான உண்மையை "வெளிப்படுத்தல்" என்று, அல்லது நாம் வேறொருவரில் வைக்கும் விசுவாசத்தால் பிறந்த உண்மை என்று சொல்லுகிறோம்.

சொல்லுபவர் உண்மைத்தனம் உள்ளவராயும், மற்றோரால் அறைப்பப்படாதவராயும் இருப்பின், அவர் சொன்னவற்றை உண்மையென்று எற்றுக்கொள்ளலாம். இப்பேர்ப்பட்ட சாதாரண மனுஷ விசுவாசமின்றிச் சீவியம் முடியாக் கருமமாயிருக்கும். ஏனெனில், அதிகப்பற்றான உண்மைகளை நாம் விசுவாசத்தினாலேயே பெற்றுக்கொள்ளுகிறோம். உங்கள்பெற்றோர்தான் உங்களைப்பெற்றோர்களென்று நீங்கள் உங்கள் கண்ணால் கண்டீர்களா, அல்லது வேறுயாரும் சொன்னார்களா? உங்களுக்கு மருந்து தரும் வைத்தியன் அதற்குரிய படிப்புப் படித்திருக்கிறாரென்று நீங்கள் கண்டீர்களா, அல்லது மற்றோரிடத்தில் அறிந்தீர்களா? சூரிய கிரகணம் ஒன்று இன்ன நாளில் வருமென்று ஆவலுடன் நீவிர் காத்திருப்பது, வானசாஸ்திரியின் சொல்லை நம்பியல்லவா? உண்மைத்தனம் கொண்டவரும், மற்றோரால் அறைப்பப்படாதவருமான யாரோ ஒருவர் சொன்ன சொல்லே எம் நம்பிக்கைக்குக் காரணம்.

மனுஷரின் வார்த்தைகள் நமக்குப் பெரிதாய்த் தோன்றுமானால், தேவனின் வார்த்தைகள் அதிலும் மிகப்பெரிதாய்த் தோன்றவேண்டாமா!

ஞானப்பிதா

—(◌)—

## வாலிபருக்கு ஓர்வழிகாட்டி

### சத்தியவேத இயக்கத்தில் ஈடுபட்ட பெஞ்சமின் என்பவரின் சீவியவரலாறு

(முன் தொடர்ச்சி)

II

**அர்ச். சூசையப்பர் அடைக்கலக் கூட்டத்தில் சேருதல்:**

அந்நாட்களில் யாழ்ப்பாணப்பட்டினத்தில் சுருட்டுத்தொழிற்சாலைகளில் வேலைசெய்து வேதஆசாரங்களை மறந்துபோகிற சிறுவர்களுக்கும் வாலிபர்களுக்கும ஆத்துமஉதவிகளைச் செய்யும நோக்கமாக ஓர் "அடைக்கலக் கூட்டம்" உண்டாக்கித் திருச்சபையின் பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பருடைய ஆதரவிலே வைக்கப்பட்டது. இக்கூட்டம அடியிடப்பட்ட சிலநாட்களுக்குள், இதிலேசேர்ந்து பயபக்தியாய் நடந்துவந்த ஓர்அங்கத்தவர் பரமபதம்அடைந்தார். இச்சம்பவத்தினால் மிகவும் துன்பப்பட்ட கூட்டத்தவர்கள் இறந்தவரின் பிரேதசேமத்திலே சமுகமாயிருந்து தங்கள் அனுதாபத்தைக் காட்டினார்கள். பெஞ்சமினும் இவரது சிலம்பக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களும் அப்பிரேத சேமத்திற்கு வந்திருந்தார்கள். அவ்வேளை சஞ்சூசையப்பர் கூட்டஅங்கத்தவர்களிலே விளங்கின ஒழுக்கமான நடையை அவதானித்த பெஞ்சமினும் இவருடைய குழாத்தினரும் அக்கூட்டத்தை மெச்சி, அதிலே நன்மதிப்புக் கொண்டதோடு கூட்டத்தலைவர் தங்களையும் அதிலேசேர்த்துக்கொள்வாரோ என யோசிப்போரானார்கள்.

அடுத்தஞாயிறுவாரம் பெஞ்சமினும் இவர் கூட்டாளிகளும் கூட்டத்தலைவரைஅண்டித் தங்களையும் சஞ்சூசையப்பர் அடைக்கலக்கூட்டத்தில் அங்கத்தவர்களாக ஏற்றுக்கொள்ளும்படி பணிந்தார்கள். இவர்களுடையவிருப்பமும் பூர்த்தியாயிற்று. அந்நாளிலே பெஞ்சமினோடு வந்துசேர்ந்துகொண்டவர்களுள் அநேகர் கடைசிமட்டும் மிகவும பிரமாணிக்கமும நன்முன்மாதிரியுமுள்ள உத்தமகூட்டத்தவர்களாய் விளங்கினார்கள்.

தான் கூட்டத்திலே அங்கத்தவரான நாட்தொட்டு தலைவருக்கும, வேளைக்குவேளை அவரிடமாய் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களுக்கும், பெஞ்சமின் மிகவும்முன்மாதிரிகையான அமைச்சலுடையவராய்க் காணப்பட்டார். சில தருணங்களில் தம்மிலும் சிறுவயதுடையோர் தலைவருக்குப் பதிலாய் நியமிக்கப்பட்டாலும், அவர்களுக்குங் கூட மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்துவந்தார். "அமைச்சல் அரசரைஆக்கும்" என்ற உண்மையைப் பெஞ்சமின் நன்றாய் அறிந்திருந்தார்என்று இதனால் விளங்குகின்றது.

சஞ்சூசையப்பர் கூட்டத்திலே சேர்ந்தஅங்கத்தவர்களாய் வருவதற்கு முன் எல்லாரும் இரண்டு மாதப்பரீட்சையிலே விடப்படுவதுவழக்கம். இப்பரீட்சைகாலம்முடிந்து பெஞ்சமினும் இவர்கூட்டாளிகளும் பூரணஅங்கத்தவர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டபோது, அந்த நாளைப் பெரும் நாளாகமதித்து மிகமனஎழுச்சியுடனும், சந்தோஷம்நிறைந்த வதனத்துடனும்தங்களைச் சஞ்சூசைமாமுனிவருடைய அடைக்கலத்திலே வைத்து ஒப்புக்கொடுத்தார்கள். அவருடைய விருதை அணிந்துகொள்வது தங்களுக்கு மகாப்பெரும் கண்ணியமென்று மதித்துக்கொண்டார்கள். (வளரும்)

---

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல் எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.

— அர்ச். பிரான்சிஸ் சேல்ஸ்

---

**ஆகமன காலத்தில்வரும் 2-ம் ஞாயிறு**

## "என்மட்டில் இடறல்படாதவன் பாக்கியவான்"

[மத். 11 : 2—10]

அருளப்பரோவெனில் கிறீஸ்துநாதருடைய செய்கைகளைப்பற்றிச் சிறைச்சாலையில் கேள்விப்பட்டபோது தம்முடைய சீஷர்களில் இருவரையனுப்பி, "வரவேண்டியவர் நீர்தாமோ, அல்லது வேறொருவர்வரக் காத்திருக்கவேண்டுமோ?" என்று அவருக்குச் சொல்லுவித்தார். யேசுநாதர் அவர்களுக்கு மறுமொழியாகச் சொன்னதாவது: "நீங்கள் போய்க் கேட்டவைகளையும், கண்டவைகளையும் அருளப்பருக்கு அறிவியுங்கள். குருடர் காண்கிறார்கள், முடவர் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் உயிர்த்தெழும்புகிறார்கள், ஏழைகள் சுவிசேஷம் போதிக்கப்படுகிறார்கள்; என்மட்டில் இடறல்படாதவன் பாக்கியவான்" என்றார். அவர்கள் போனபின்பு யேசுநாதர் அருளப்பரைக் குறித்து ஜனக்கூட்டத்தைநோக்கிச் சொல்லத்துவக்கினதாவது: "நீங்கள் கானகத்தில் எதைப் பார்க்கப் போனீர்கள்? காற்றினால் அசைந்தாடுகிற நாணலையா? பின் எதைத்தான் பார்க்கப் போனீர்கள்? மெல்லிய உடைகளை அணிந்த மனிதனையோ! இதோ, மெல்லிய உடையணிகிறவர்கள் இராசமாளிகையில் இருக்கிறார்களே; அல்லவென்றால் எதைப் பார்க்கப் போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியிலும் மேற்பட்டவரைத்தான் என்று உங்களுக்குச்சொல்லுகிறேன்; ஏனென்றால், இதோ என்தூதனை உமது சமுகத்துக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்குமுன்னே உமது வழிகளை ஆயத்தம்பண்ணுவான் என்று எழுதப்பட்டது இவரைப்பற்றித்தான்" என்றார்.

உலகஇரட்சகர் அற்புதங்களினாலேயே தம்மைவெளிப்படுத்துவார் என்று இசையாஸ் தீர்க்கதரிசி எழுதியிருந்தார். அவ்விரட்சகரின் வருகைக்கு ஆயத்தப்படுத்தும்படி அனுப்பப்பட்டவராகிய ஸ்நாபக யுவானியாரும் உலகஇரட்சகரைப் புதுமைகள் செய்யும் ஒருவராகவே தமது சீஷர்களுக்குக் காண்பிக்க விரும்பினார். "வருகிறவர் நீர்தானா, அல்லது வேறொருவரை எதிர்பார்க்கிறோமா? என்றதற்கு, யேசுநாதரின் மறுமொழியோ வார்த்தைகளாலல்ல கிரியைகளினாலேயாயிருந்தது. "குருடர் காண்கிறார்கள், செவிடர் கேட்கிறார்கள்........"

இவ்விதம் தம்மைத் தேவனென்று ஒப்பித்த யேசுநாதரை யூதர்கள் நம்பி ஏற்றுக்கொள்ளவில்லை. அத்தால் அகோர தண்டனைக்குள்ளானார்கள். அதே யேசுநாதர் தாமே எம்மையும் தீர்வையிட வரப்போகின்றார்.

---

பின்வரும் உறுதிப்பத்திரத்தைச் சொந்தஎழுத்தால் திருப்பியெழுதி, நிரப்பி 'இளைஞர் பக்கம்', புனித அன்னம்மாள் கோவில், பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்புவோரின் நாமங்கள் இதற்குரிய இடாப்பில் பதியப்பெற்று, மிகவும் விரும்பத்தக்க முறையில் பிரயோகிக்கப்படும்.

### உறுதி வாக்கு

[பெயர்] ........................................ ஆகிய நான், உத்தமனாய்ச் சீவிக்க விரும்பிப் பண்ணும் வாக்கு.

1. என்னாலியன்றளவு திருச்சபையின் போதகங்களைக் கற்றுக் கொள்ள முயலுவேன்.

2. தாராளமான மனசுடன் அவற்றை அனுசரிப்பதில் வீரிய குணம் காண்பிப்பேன்.

இடம்: ........................ ஒப்பம்: ........................

பிறந்த திகதி: ........................ ஞானஸ்நானத் திகதி: ..........

முதல்நன்மைத் திகதி: ............ உறுதிபூசுதற் திகதி: ..........

---

**புனிதர் வரலாறு**

## அர்ச். யுவக்கினா வெடுனா டி மாஸ்

(முன்தொடர்ச்சி)

இவர்களுக்கு இரு ஆண்மக்களும், இரு பெண்மக்களும் பிறந்திருக்கும் போது நெப்போலியனது படை ஸ்பானிய தேசத்தை முற்றுகையிட்டது. தியடோறு டி மாஸ் அவர்கள் பார்சலோனாவிலிருந்து தமது சென்மபதியாகிய விச்என்ற கிராமத்திற்குச் சென்றார். நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டுப் போர்வீரனாக மாறினார். படைவீரர் பழைய பட்டணத்தை நோக்கி முன்னேறியபோது விச் கிராமம்முழுவதும் பாதுகாப்பைநாடி மலை அடிவாரத்தைநோக்கிப் பறந்தது.

யுவக்கீனா ஓர்அகதியாக மலைஅடிவாரத்தை நோக்கிச் சென்று மறைந்து வசித்திருந்தாள். இந்தச் சோதனை காலத்திலே துயரின்மேற் துயராக செல்வக்குழந்தைகள் இருவரை அவள் இறக்கக் கொடுத்தாள். பலவித கஷ்டங்களை அனுபவித்து மீண்டும் தனது சொந்தக் கிராமம் சென்றாள்.

1813-ம் ஆண்டு குடும்ப தலைவரும் படைவீரருக்குரிய ஒப்பந்தத்திலிருந்து விலகிக்கொண்டார். இது நிகழ்ந்து மூன்று வருடங்களின்பின் 1816-ம் ஆண்டு தியடொறோ மாணமானார்.

அதன்மேல் விதவையான யுவக்கீனா முதல் ஏழு வருடங்களையும் தனது குழந்தைகளைச் சாங்கோபாங்கத்திலே வளர்ப்பதிலும், தன்னுடைய கிராம வைத்தியசாலை நோயாளருக்கு உதவி செய்வதிலும் கழித்துவந்தாள்.

1820-ம் ஆண்டு அவள் ஒலொட் எனுமிடத்திலிருந்த கார்த்துசியன் சபைக் குரவரான வண. ஈஸ்றபான் பபீர்கஸ் சுவாமியாரிடம் சென்று ஒரு கன்னிகாமடத்தில் சேரத் தான் கொண்டிருக்கும் கருத்தை அவருக்கு வெளியிட்டாள். இதைக்கேட்ட குருவானவர் மடத்தில் சேருவதிலும் பார்க்கக் கல்வியறிவூட்டுதல், நோயாளரைப் பராமரித்தல்ஆகிய இருவகைத் தொண்டுகளையும் செய்வதற்கென்று ஒரு புதியசபையை ஆரம்பிக்கும்படி அவளைத் தூண்டினார்.

அதற்கிடையில் இன்ஸ் என்ற அவளுடையமகள் கன்னிகாமடத்திற் சேர விரும்பித் தனதுவிருப்பத்தைத் தாய்க்குத் தெரிவித்தாள். அவளோ அதற்குச் சம்மதியாது மணவாழ்க்கையை மேற்கொள்ளும்படி மகளை வற்புறுத்தினாள். தியொடரு என்ற மற்றொரு

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

# பாலர் பக்கம்

அன்புத் தம்பி - தங்கையரே!

இன்று ஒருபெரிய அர்ச்சியசிட்டர் திருநாளைத் திருச்சபை கொண்டாடுகின்றது. அவர்தான் சரீரம் அழியா வரம்பெற்ற புனித பிரான்சீஸ் சவேரியார். கீழைத்தேச அப்போஸ்தலர் என்று பெயர்பெற்ற இவரைக் கீழைத்தேசங்களின் பாதுகாவலராகத் திருச்சபை நியமித்துள்ளது. அவரே இந்தியா, யப்பான் முதலிய நாடுகளிலே சத்திய மறையைப் பரப்பியவர். இலங்கையிலும் சத்திய மறையின் சுடரொளிபரவக் காரணரும் அவரே. அவர் இலங்கைக்கும் வந்து சென்ருர் என்று சிலர் கூறுவர். நீங்கள் பிறசமயத்தினரின் மனந்திரும்புதலுக்காக அவரிடம் மன்ருடிவாருங்கள். தினமும் "அர்ச். சவேரியாரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்ற மனவல்லயச் செபத்தையும் சொல்லிவாருங்கள்.

இன்னும் எதிர்வரும் 8-ந் திகதி தேவமாதா மாசில்லாமல் உற்பவித்த தினமாகும். இது திருச்சபையிலே ஒரு பெரிய தினம். தேவ தாயாரை மகிமைப்படுத்துவதற்காக நீங்களும் சிறுசிறு ஒறுத்தல் முயற்சிகள், செபமுயற்சிகளைச் செய்து அத்தினத்துக்கு ஆயத்தஞ் செய்யுங்கள். அன்றுதினம் மாதாவின் புகழ்ச்சிக்காகத் திவ்விய நன்மை பெற மறவாதேயுங்கள்.

அண்ணு

## மின்மினிப் பூச்சி

பறக்கும் பூச்சி ஒன்று இரவில் ஒளி வீசுகிறது. அது மின்மினிப் பூச்சி. கிரேக்கரும், ரோமரும் சிறப்புற்று விளங்கிய காலத்தில் அந்திவேளையில் அடிமைகள் மின்மினிப் பூச்சிகளை விரட்டிப்பிடித்து, தங்கள் எஜமாட்டிகளிடம் கொடுப்பார்கள். அந்தச் சீமாட்டிகள் அவற்றைக் கொண்டு தங்கள் கூந்தலையும், கைகளையும் அலங்கரிப்பார்கள். வளங்கொழிக்கும் சிறுதெய்வங்கள் என்று இந்தியாவில் அப்பூச்சிகள் கருதப்பட்டதும் உண்டு. ஜப்பானில் ஆயிரக்கணக்கான மின்மினிப்பூச்சிகளைப் பிள்ளைகள் சக்கரவர்த்தியின் அரண்மனைமுன் விடுவார்கள்; அது சக்கரவர்த்தியைக் கௌரவிப்பதாகும்.

பால்த்திமோரில் பள்ளிப் பிள்ளைகள் 1948-ம் ஆண்டு முதல் வேனிற் காலங்களில் மின்மினிகளைப்பிடித்து டக்றர் வில்லியம் டி மெக்கல்ராய்க்கு விற்கிருர்கள். மெக்கல்ராய் என்பவர் ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் உயிர்நூல் பேராசிரியர். அசாதாரணமான பூச்சிகளைப்பற்றி அவர் ஆராய்ச்சி நடத்திவருகிருர். அதற்காகச் சென்ற பத்தாண்டுகளில் அவர் இலட்சக்கணக்கான மின்மினிப் பூச்சிகளை விலைகொடுத்து வாங்கியிருக்கிருர். சென்றஆண்டில் மட்டும் பிள்ளைகள் 4 இலட்சம் மின்மினிப் பூச்சிகள் பிடித்து அவருக்குக் கொடுத்திருக்கிருர்கள். இந்தஆண்டில் அவருக்கு இன்னும் அதிகமான உயிருள்ள பூச்சிகளே வேண்டும்.

மின்மினிப் பூச்சியின் வால் ஏன் ஒளி வீசுகிறது? அதற்கு எவ்வாறு ஒளி உண்டாகிறது? இவற்றை அறிய விஞ்ஞானிகள் விரும்புகிருர்கள். டக்றர் மெக்கல்ராய் பலஆண்

(அடுத்தபக்கம் பார்க்க)

---

### இருசொல் அலங்காரம்

### — 1 —

**19-11-59** புனிதவீரர் பக்கத்தில் விடைகாணும்படி நாம் கேட்டிருந்த இருசொல் அலங்காரத்திற்கு அநேக தம்பி – தங்கையர் விடை எழுதி அனுப்பியிருந்தனர். ஆனல், ஒருவராவது எல்லா வினுக்களுக்கும் சரியான விடை அனுப்பவில்லை.

நான்கு வினுக்களுக்குத் திருப்தியான விடைகளை அனுப்பியவர்:

செல்வன்
**எஸ். என். எல். பெர்னுண்டோ,**
**42/2, கன்னுரத்தெரு,**
**கொழும்பு.**

**சரியான விடைகள்:**

1. சத்தியபோதினி
2. நன்மையில்
3. பால்வற்றி
4. அடிப்பாரற்று
5. ஞாயிறுபோய்.

இவ்வாரம் இன்னுஞ்சில வினுக்கள் தருகிருேம் விடைகளை **8-12-59** இல் கிடைக்கும்படி அஞ்சல்அட்டையில் (போஸ்றகார்ட்) எழுதி அண்ணு, புனித அன்னுள் கோவில், பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

## ஆயத்தமாகவேண்டிய காலம்

# ஆகமன காலம்

நத்தால்திருநாளுக்கு — கிறிஸ்மஸ் விழாவுக்கு இன்னும் காலம் எவ்வளவு இருக்கின்றது? ஏறக்குறைய நான்கு வாரங்களே இருக்கின்றன என்று இதற்கிடையிலே நீங்கள் கைவிரல்களை எண்ணிக் கணக்குப் பாராமல் இருப்பீர்கள் என்று நான் நினைக்கவில்லை.

ஆனல், புனிதவீரர்களிற் சிலர் அது இன்னும் அதிக தூரத்தில் இருக்கிறது என்று சொல்லுகிருர்கள். நான்கு வாரங்கள் என்றதும் பொறுத்திருக்க இன்னும் போதிய காலம் இருக்கிறது என்று அவர்கள் எண்ணுகிருர்கள். ஆனல், முதலாவது கிறிஸ்மஸ் பண்டிகையின் வருகையை எதிர்பார்த்து மக்கள் எத்துணை நீண்டகாலம் காத்திருந்தார்கள் என்று நீங்கள் அறிவீர்களா?

தாம் ஓர் இரட்சகரை அனுப்புவதாக ஆதாமுக்கும், ஏவாளுக்கும் சர்வேசுரன் வாக்குப்பண்ணியிருந்தார் ஆனல், எப்போது என்று அவர்களுக்கு அவர் சொல்லவில்லை. அதனல், மக்கள் நெடுங்காலம் அவர் வரவை எதிர்பார்த்திருந்தார்கள். நாலாயிரம் வருடங்களுக்கு மேல் அவர்கள், காத்திருக்க வேண்டியவர்கள் ஆனர்கள்.

கிறிஸ்மஸ்விழாவை எதிர்பார்த்து நாங்கள் காத்திருக்கும் நான்கு வாரங்களும் ஆகமனகாலம் என்று அழைக்கப்படுகிறது. ஆகமனம் என்ருல் "வருகை" என்று அர்த்தம். யேசுவின்வருகைக்கு நாங்கள் ஆயத்தஞ் செய்யவேண்டிய காலம் ஆகமன காலம்.

முதலாவது கிறிஸ்மஸ் விழாவை எதிர்பார்த்து மக்கள் காத்திருந்த நாலாயிரம் வருடங்களையும் ஆகமன காலத்தின் நான்குவாரங்களும் நாங்கள் சிந்திக்கச்செய்கின்றன. முதலாவது கிறிஸ்மஸ் பண்டிகைக்கு அக்காலத்தில் வசித்திருந்த மக்களில் அநேகர் நன்ருக ஆயத்தஞ் செய்யவில்லை. அவரின் வருகைக்கு அவர்கள் தயாராய் இருக்கவில்லை. அவர்கள் யேசுவைக் கவலைப்படச் செய்தார்கள்.

அடுத்துவரும் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு நாங்கள் நன்கு ஆயத்தஞ் செய்வோமாக! எங்களிடம் யேசு வரும்பொழுது நாங்கள் நல்ல ஆயத்தமாய் இருந்து அவரை நல்வரவேற்போமாக! அவ்வாறு செய்வது யேசுவுக்கு மகிழ்ச்சி உண்டுபண்ணும்.

கிறிஸ்மஸ் விழாவுக்கு ஆயத்தமாவதற்கு ஓர் நல்லவழி, நாள்தோறும் யேசுவுக்காக ஏதோ ஒருநல்ல காரியத்தைச் செய்வதேயாகும். சுருங்கச் சொல்லுகில், இந்த ஆகமன காலத்தில் யேசுவின் வருகையைப் பற்றி நாங்கள் தியானிக்கவேண்டும். விசேட தபக் கிருத்தியங்கள், ஒறுத்தல் முயற்சிகள் செய்யவேண்டும். விசேடசெபங்கள் செய்துவர வேண்டும். மோட்சத்திலுள்ள தமது வாசஸ்தலத்தை விட்டு வந்ததற்காகத் திவ்விய யேசுவுக்கு நன்றித்துதி செலுத்தவேண்டும்.

---

### இருசொல் அலங்காரம்

### — 2 —

1. சிறுவர் இலகுவில் படிப்பதேன்?
   சீக்கிரம் நல்லபாம் பென்று
   அறிவதேன்?
2. சிரித்து மகிழ்வதேன்?
   சித்தப்பா ஆவதேன்?
3. நடனக்கூட்டம் கலைவதேன்?
   நலமாய் ஆவணி பிறப்பதேன்?
4. செவ்வாய் பிறப்பதேன்?
   செருக்குடன் அமாவாசை
   வருவதேன்?
5. கிருஷகர் கட்டும் வேலி என்ன?
   திருட்டுப் பெண்களின் பட்ட
   மென்ன?


அனுப்பியவர்:

செல்வி யசிந்தா சவிரிமுத்து,
கரம்பன், ஊர்காவற்றுறை.

---

### உங்களுக்குத் தெரியுமா?

By Scio




மனித உடல் உயிர்பெற்று வாழ்வதற்குத் தினமும் குறைந்தபட்சம் 700 கலறிகள்—அதாவது உணவுச்சத்து சம்பந்தமான வெப்ப யூனிற்கள் (மேலே காட்டியபடி சமைத்த சாதத்தைக் கொண்ட சராசரியான கோப்பைகளில் காணப்படும் தொகை) தேவைப்படுகின்றன. உணவில்லாமல் ஓர் மனிதன் 30 முதல் 40 தினங்கள் மாத்திரமே உயிர் வாழ்ந்திருக்க முடியும். ஆனல், தண்ணீர் இல்லாமல் 3 முதல் 5 தினங்களே வாழ்ந்திருக்க முடியும்.

உலக முழுவதும் எடுக்கப்பட்டுள்ள கணக்கு விபரங்களை ஆதாரமாகக்கொண்டு ஒரு மனிதன் இப்போது சராசரி வீதமாக 52 வருடமே உயிர் வாழ்கிருனென்று நிபுணர்கள் கூறுகின்றனர். அவனுடைய சராசரி நிறை 131 ருத்தல். சராசரி உயரம் 5 அடி 4 அங்குலம். பெண்கள் மட்டிலே இது சொற்பம் குறைந்ததாகும். தோலின் நிறத்திலும், மற்றும் வெளிப்புற சம்பந்தமான வேற்றுமைகள் நீங்கலாக மற்றப்படி மக்கள் எல்லோரும் சரீர சம்பந்தமாய் ஒரே தன்மையாய் இருக்கின்ருர்கள்.

1958-ம் ஆண்டு முதல் ஐக்கிய அமெரிக்க தேசம் ஐப்பசி மாதத்தின் முதலாவது புதன் கிழமையைத் "தேசிய செப நா" ளாக அனுசரிக்கின்றது. ஜனுதிபதி ஐஸனேவர் அவர்கள் தமது பிரகடனம் ஒன்றிலே இதனைப் புறம்பாக்கி வைத்திருக்கின்ருர். ஐக்கிய அமெரிக்க தேசத்தினதும், சகல மனித வர்க்கத்தினதும் சுபீட்சத்திற்காக "ஒவ்வொருவரும் தத்தம் சமயாசாரப்படி" அன்றுதினம் இந்தச் செபத்தில் கலந்துகொள்ளும்படி அவர்தமது உடன் அமெரிக்கரையும், மற்றும் தரிசகர்களையும் தூண்டியிருக்கின்ருர்.

டுகளாக இந்தஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார். முதலில் அவர் பல்லாயிரக்கணக்கான மின்மினிப் பூச்சிகளின் வால்களைப் பிய்த்தெடுத்து அவற்றைஒருபெரியஉரலில்போட்டு உலக்கைகொண்டு பொடியாக்கினர். மிகவும் வருந்தி அவர் பல சோதனைகள் செய்துபார்த்து, மின்மினிப் பூச்சியில் லூசிஃபெரின், லூசிஃபெரேஸ், 'எடிபி' என்னும் அடனைஸின், டிரைபாஸ்ஃபேட், பிராணவாயு, மாங்கினிஸியம் ஆய இரசாயனப் பொருள்கள் உள்ளன என்று கண்டுபிடித்தார். நரம்பினின்று ஏற்படும் ஓர்உணர்ச்சியால் இரசாயனப் பொருள்கள் பிரிந்துவிடுகின்றன என்றும், அதனால் வால் ஒளி வீசுகிறது என்றும், மீண்டும் ஒரு நரம்பின் உணர்ச்சியால் பிரிந்தவை இணைவதால் ஒளி மறைந்துவிடுகிறது என்பதும் அவருக்குத் தெரியலாயிற்று. நமது உடலிலுள்ளசக்தி நாம் வேண்டும்போது எவ்வாறு வெளிப்படுகிறது என்பது இம் மின்மினிப் பூச்சி ஆராய்ச்சியால் தெளிவாயிற்று.


நத்தால்

## சிறுகதைப் போட்டி

தம்பிதங்கையரே! உங்களிற் பலரது விருப்பப்படி போட்டி முடிவு திகதியை ஒருவாரம் நீடித்துள்ளோம். இன்னும் சிறுகதைப் போட்டியிற் கலந்துகொள்ள விரும்பும் அனைவருக்கும் ஒரு சந்தர்ப்பம் தரும்படியாகவே இதை நீடித்திருக்கிறோம்.

போட்டிக் கதைகள் அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி 7-12-59 ஆகும்.

கதைகள் அனுப்புவோர் கீழ் வரும் முகவரியை வெட்டி மேலுறையில் ஒட்டி அனுப்ப மறக்கவேண்டாம்.

"நத்தால் சிறுகதைப் போட்டி",
புனித அன்னாள் கோவில்,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்.



## St. Henry's College, Ilavalai

### Admission 1960

Few vacancies in all Classes from Form I to H. S. C. & G. C. E. Advanced Level (Arts & Science). Fully equipped Laboratories. Hostel accommodation available.

Entrance Test on 7-1-60. College re-opening on 11-1-60. Applications to reach the Office by 30th December, 1959.

RECTOR.


### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதா, (திருஇருதயநாயகி),கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்றாட்டினால் நான் கேட்டுக்கொண்டவரங்கள் கிடைக்கப்பெற்றேன். இவர்களின்நாமம் என்றும் புகழப்படுவதாக.

பி. எஸ். எம்.

* * *

### நன்றியறிந்த தோத்திரம்

களவுஎடுத்தவனைக் காண்பித்தருளும்படியாகவும், கண்டுபிடித்தால் பாதுகாவலனில் பிரசுரிப்பதாகவும் மன்றாடியாறு நாளே தெரிந்துகொள்ளச்செய்த அற்புதத்தாயே, உமக்கு என்மனமார்ந்தநன்றி. இன்னும் என்மற்றும் வேண்டுதல்களும் கிடைக்கத்தேவரீருடையகருணை ஆவதாக.

மெ. பி. அ.

கொழும்பு



திரு. வ. சந்தியாப்பிள்ளை (போர்மன்)
அவர்கள் அமரபதமடைந்த

## 4-ம்வருட மரணஞாபகம்

தோற்றம்: 25-7-1880 மறைவு: 10-12-1955

அன்னையில்லாக்குறையை
அரிவையர் நாமறியாது
ஆசையுடன் பாசமூட்டிப் பாரினிலே
பாவையரைச் சிறப்பித்த
அன்புதரும்ப அரவணைத்த
அருமைப் பிதா
தாயின்றதையலரைத் தந்தை
தனிமையில் நீத்து
புகமுடம்பை எமக்களித்துப்
பூதவுடல் தாமேந்திச்
சென்றதின மின்றல்லோ
வருடங்கள் நான்கின்பின்
அன்னாரை நினைந்துருகி
ஆருத்துயரோடு புலம்புகிறோம்

இதனைக் கண்ணுறும் அன்பர்களே! இவ்வாத்துமத்தை நினைந்து வருகிற (10-12-59)-ல் உங்கள்செபங்களில் வேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிள்ளைகள்.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

**இல. M. B. 9662**

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு
கந்தையா மகாதேவன்
— வழக்காளி.

எதிராக
கொக்குவில் மேற்கு
செல்லப்பா விசுவலிங்கம் தனக்காகவும், காலஞ்சென்ற தனது பெண்சாதி சின்னம்மாவின் ஆதனத்தின் பிரதியாகவும்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 9662-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக் காணிகளை 1960-ம்ஆண்டு தைமாதம் 16-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று என்னால் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,800-உம், இன்னும் ரூபா 1,000-த்திற்குப் 13-1-56 தொடக்கம் 31-10-57 வரையும் 100-க்கு 8%வட்டியும் பின் தீர்வைக் கூட்டுத்தொகையில் இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 441 ரூபா $2\frac{1}{2}$ சதமும்.

### காணிகளின் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர்கோயிற்பற்று கொக்குவில்இறை, "தக்கன்சிட்டி" பர. நில. இலா. $\frac{1}{2}$-யும், பயிர்வகைகளும், வடமேற்கேஇருக்கும்கிணற்றில்தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புஉரித்தும். எல்லை: கிழக்கு — இரத்தினம் பெண் அன்னம்மாவின் ஆதனம். வடக்கு — சரவணமுத்து இராசையாவின் ஆதனம். மேற்கு — எதிரியின் ஆதனம் (இப்போ விலைப்பட்டு விட்டது) தெற்கு — விஞயர் பொன்னம்பலத்தின் ஆதனம்.

2. மேற்படிஇறை "தக்கன்திட்டி" பர. நில. இலா 1-உம், பயிர்வகைகளும், வடமேற்கே இருக்கும்கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்காலுரித்தும். எல்லை: கிழக்கு — மேலேசொல்லப்பட்ட காணி. வடக்கு — ஒழுங்கை. மேற்கு — ஒழுங்கை முகப்பும், மணியர் வேலுப்பிள்ளையின் ஆதனம். தெற்கு — விஞயர் பொன்னம்பலத்தின் ஆதனம். இதில் சொரியலாய் அரைவாசி.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

35, 4 ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 26-11-59

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA.

In the matter of the intestate estate of the late Loorthammah wife of Pakkinathar Joseph of Karaiyoor, Jaffna.

Deceased.

Testamentary Jurisdiction No. 713.

Pakkinathar Joseph of Karaiyoor, Jaffna.

Petitioner.

Vs.

1. Santhia Pakkinathar and wife.
2. Regian of Karaiyoor, Jaffna.

Respondents.

This matter coming on for disposal before P. Sri Skanda Rajah Esquire, District Judge, Jaffna on the 2nd day of November 1959 in the presence of Mr. M. M. Sultan, Proctor on the part of the petitioner and the affidavit of the petitioner having been read: It is ordered that the petitioner be declared entitled to have Letters of administration to the estate of the said intestate as her husband and directing that such letters of administration be issued to him accordingly unless the Respondents or any other person or persons interested shall appear before this Court on 7th December, 1959 and state objection or shew cause to the satisfaction of this Court to the contrary.

Sgd. P. SRI SKANDA RAJAH,
District Judge, Jaffna.

2nd day of November, 1959.

புத்தக மதிப்புரை

## இலகு எண்கணிதம்

ஆறும், ஏழாம், எட்டாம் வகுப்புகளுக்குரியது.

ஆக்கியோன்:
ஆசிரியர் தோமஸ் ஈப்பென், B. Sc.,
திருஇருதய கல்லூரி, கரவெட்டி.
பிரசுரம்:
அர்ச். சூசைமாமாமுனிவர்
கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.
பக்கங்கள்: 311.
விலை: ரூபா 300.

வித்தியாபகுதியாரின் பாடத்திட்டத்தைத் தழுவியும், வித்தியாபகுதியாராலேயே அங்கீகரிக்கப்பட்ட கலைச்சொற்களைப் பயன்படுத்தியும் ஆறாம், ஏழாம, எட்டாம் வகுப்புகளுக்கென எழுதப்பட்டுள்ள இந்தஎண்கணிதம் பாடசாலை மாணவர்கள் எளிதில்விளங்கக்கூடிய இனிய நடையிலே, அவர்களுக்கெல்லாம் எணகணிதத்தில் ஆர்வமுண்டுபண்ணக்கூடிய இதமான முறையிலே அமைந்திருக்கக்காண்பது ஆனந்தமே. மூன்று வகுப்புகளுக்குமுரிய பகுதிகள் மூன்று தவணைகளுக்குமாக வகுத்து எழுதப்பட்டிருப்பது இதிலுள்ள ஓர் விசேடமாகும். இன்னும் அந்தந்த வகுப்புக்குரியபகுதிகளைத் தொடக்குமுன் மூன்று வகுப்புகளுக்கும் உபயோகமான வாய்க்கணக்குகள் ஒவ்வோர் அதிகாரத்திலும் இடம்பெற்றிருப்பது மற்றோர் விசேடமாகும். இந்நூலை ஆராய்வாகப்படிக்குமிடத்து, கணக்குகளைச் சுலபமாகக் கற்பதற்கு வேண்டிய சகலவிதமான முறைகளும், இலகுவான வழிகளும் அதிகம் விளக்கமாகக் காட்டப்பட்டிருப்பதைக் காணலாம். மூன்று வகுப்புகளுக்குமுரிய பகுதிகளையும் ஒரேநூலில் அமைத்ததற்கு ஆசிரியர்கூறும் நியாயம் சாலவும் பொருத்தமானதே. எண்பாடத்தில் கனிஷ்டவகுப்புகளின்தரம் குறைவடைந்துவரும் காரணத்தை ஆசிரியர் கண்டறிந்து அதனை நிவிர்த்திசெய்யும் முகமாக ஒவ்வோர் அதிகாரத்திலும் மனக்கணிதம் கூடுதலாக இடம்பெறச் செய்திருக்கின்றார். கணிதநூல்களை அப்பியாச வேலைக்காகவே பெரும்பாலும் மாணவர் பயன்படுத்துவதை உணர்ந்து இந்நூலில் ஏராளமான பயிற்சிகளும், வினப்பத்திரங்களும இடம்பெறச்செய்திருக்கின்றார். தமது ஆற்றலையும், அனுபவத்தையும் மேற்கொண்டு ஆசிரியர்அவர்கள் ஆக்கித்தந்துள்ள இந்த இலகுஎண்கணிதநூல் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும பெரிதும் பயன்படுமென்பதில் சந்தேகமில்லை. அதனால் கல்விஉலகம் இதனை உவந்து வரவேற்கும் என்பதே நமது திறம்பாத நம்பிக்கையாகும். நமக்கு உதவிய பிரதிக்காக நன்றிதெரிவிக்கின்றோம்.

"ஒற்றுமையினம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA.

In the matter of the last Will and Testament of Mohideen Sahib Mohammad Meera Sahib Hadjiar of No. 36, Navanthurai Road Vannarponnai South West Jaffna late of Sainthamaruthu Division No 2 Kalmunai in Batticaloa.

Deaeased.

Testamentary jurisdiction No. 709.

Mohammad Meera Sahib Hadjiar Mohammad Mohideen of No. 36 Navanthurai Road, Vannarponnai South West Jaffna.

Petitioner.

Vs.

1. Mohammad Meera Sahib Hadjiar Mohideen Sahib of do.
2. M. H. L Marikkar and wife.
3. Mohammad Hussain Fatima Nachchiya both of Mawanella.
4. P. A. Gaffoor and wife.
5. Mohammbd Nachchia both of do.
6. Uathumanachchin widow of Mohammad Meera Sahib Hadjiar of Sainthamarathu in Kalmunai.

Minor 7. Umma Salma daughter of Mohammad Meera Sahib Hadjiar.
" 8. Mohammad Meera Sahib Hadjiar Mohammad Sahib.
" 9. Mohammad Meera Sahib Hadjiar Sithi Saleena.
" 10. Mohammad Meera Sahib Hadjiar Saleem and
" 11, Mohammad Meer Sahib Jadjiar Sameem all of do.

The 7th to 11th respondents are minors appearing by their guardian ad litem the 6th respondent.

Respondents.

This matter coming on for disposal before P. Sri Skanda Raja Esquire District Judge Jaffna on the 4th day of November 1959 in the presence of Mr. M. M. Sultan Proctor on the part of the petitioner and the affidavit of the petitioner having been read: It is ordered that the abovenamed 6th respondent be appointed guardian-ad-litem over the minors the 7th, 8th, 9th, 10th and 11th respondents for the purpose of protecting their interests and of representing them in this case and that the petitioner be declared entitled to have Letters of administration with the copy of Will annexed to the estate of the abovenamed deceased as one of his sons and one of his heirs and directing that such letters of administration with the copy of the Will annexed be issued to the petitioner accordingly—unless the Respondents or any other person or persons interested shall appear before this Court on the 7th day of December 1959 and state objection or shew sufficient cause to the satisfaction of this Court to the contrary.

It is further ordered that the petitioner do produce the minors in Court on the said date.

Sgd. P. SRISKANDARAJAH,
District Judge, Jaffna.

Jaffna this 4th day of Nov. 1959.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 3-1959.